பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 08 வெள்ளிக்கிழமை (21.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 116

# வடக்கு - கிழக்கு இணைப்பைத் தனது அணி எதிர்க்கவில்லை என்கின்றார் பிள்ளையான்

## பல அரசியல் தலைவர்களுடனும் கொழும்பில் அவர் கலந்துரையாடல்



கொழும்பு,மார்ச்.21

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவர் பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) கொழும்பில் தங்கி நின்று ஜனாதிபதி மற்றும் பல அரசியல் தலைவர்களைச் சந்தித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று தமிழ் அமைச்சர் ஒருவரையும் அவரது கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவரையும் சந்தித்த பிள்ளையான் அச்சமயம், வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்குத் தமது கட்சி எதிரானது அல்ல என்ற தகவலை அவர்களிடம் தெரிவித்தார் என அறியவந்தது.

அண்மையில் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமது கட்சியின் உறுப்பினர்களுடன் கொழும்பு வந்துள்ள பிள்ளையான், உயர் பாதுகாப்புடன் கொழும்பில் பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அவரது கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகைக்குச் சென்று ஜனாதிபதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியின் நிர்வாக அதிகாரியாக மேஜர் ஜெனரல் நியமனம்

கொழும்பு,மார்ச்.21

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு மேலதிக உதவிப் பணிப்பாளர் நாயகமாக ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல சுனில் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செய்துள்ளதாக அறியப்படுகிறது.

அரசின் இச்செயலைக் கண்டித்துள்ள ஊடக அமைப்புகள், ஊடகத்துறையை இராணுவ மயப்படுத்தும் முயற்சி இது எனவும் குற்றம் சாட்டியுள்ளன.

எனினும், அரசு இந்தக் குற்றச்சாட்டை, உருவாக்கப்பட்ட பொய் என நிராகரித்துள்ளதுடன் ரூபாவாஹினியில் காணப்படும் முகாமைத்துவக் குறைபாடுகளுக்கு தீர்வு காண்பதற்காகவே முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் சில்வா நியமிக்கப்பட்டார் எனத் தெரிவித்துள்ளது.

இராணுவம் ரூபாவாஹினியின் பாதுகாப்பைப் பொறுப்பேற்று, அதன் இருநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்களை உள்ளே அனுமதிக்க மறுத்த சம்பவத்திற்கு ஒரிரு தினங்களுக்கு பின்னர் மேஜர் ஜெனரல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே, இணைத்தலைமைப் பிரதிநிதிகள் வன்னி செல்ல அரசு அனுமதி வழங்காது!

### வெளிவிவகார அமைச்சு மறைமுக அறிவிப்பு

கொழும்பு,மார்ச்21

வெளிநாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க மாட்டாது என்று இலங்கை அரசாங்கம் பூடகமாக, மறைமுகமாக - சுற்றிவளைத்து - தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அதிகாரிகள் பிரமுகர்கள் இதுவரை வன்னிக்குப் பல தடவைகள் விஜயம் செய்தபோதிலும், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் எவ்வித பயன்தரக் கூடிய, முன்னேற்றமும் இல்லை - என்று இலங்கை வெளிநாட் டு அமைச்சு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பிற்பகலும் மழை பெய்யலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

குடாநாட்டில் இன்று காலை மழை குறைவாக இருக்கும். மாலையில் அநேகமாக இடி, மின்னலுடன் கடும் மழை பெய்யலாம் என்று வளிமண்டலத் திணைக்கள யாழ். அலுவலகம் தெரிவித்தது.

நேற்றுப் பிற்பகல் இடி மின்னலுடன் மழை பெய்ததில், பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 5.30 மணிவரையான 3 மணி நேரத்தில் மட்டும் 40.3 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. நேற்று மாலை நீண்ட நேரம் இடிமுழக்கம் இருந்த போதிலும் மின்னல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், மட்டக்களப்பில் 1,75,000 பேர் இடம்பெயர்வு; 8 பேர் உயிரிழப்பு; 16,000 ஏக்கர் நெற்பயிர் நாசம்

மன்னார்,மார்ச் 21

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வடக்கில் தொடரும் மழை காரணமாக மன்னாரில் சுமார் 50ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கிழக்கிலும் தொடர் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 20ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் சுமார் ஒரு லட்சத்து 74ஆயிரம் பேர் மழை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். இதுவரை 8 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நேற்று அறிவித்தது.

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பொதுமக்களின் இயல்வு வாழ்க்கை சீர்குலைந்திருந்ததுடன் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அறுவடைக் காலத்தில் கடும் மழை பொழிந்ததால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மன்னாரில் அறுவடைக்குத் தயாராக இருந்த 12ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் நாசமாகி

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சரண் அடைந்தவர்களைத் தங்கவைக்க தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

குடாநாட்டில் பாதுகாப்புத் தரப்பினிடம் சரணடைந்த 44 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அந்த நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விஜயம் செய்து அவர்களின் தேவைகள் மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பயங்கரவாதத் தடுப்பு என்ற பெயரில் நடக்கும் கடத்தல், காணாமற்போகச் செய்தலைத் தடுத்து நிறுத்துங்கள்!

### பெண்கள் யாழ். நகரில் கூடிப் பிரகடனம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

குடாநாட்டில் பயங்கரவாதத் தடுப்பு என்ற பெயரில் இடம்பெறும் ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்யப்படுதல், நீதிக்குப் புறம்பான கொலைகள் போன்றவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்றுப் பெண்கள் கூடி வெளியிட்ட பிரகடனம் ஒன்றில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது. ஐந்நூறுக்கும் அதிகமான பெண்கள் ஒப்பமிட்டுப் பிரகடனம் ஒன்றின் மூலம் இப்படி ஒரே குரலில் கோரியுள்ளனர்.

மகளிர் தினத்தை ஒட்டி மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஒன்று கூடல் நிகழ்வில் இது தொடர்பான பிரகடனம் வெளியிடப்பட்டது.

உலகெங்கும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். யாழ்ப்பாணப் பெண்களின் பிரச்சினைகள் ஏனைய பெண்களின் பிரச்சினைகளை விட அதிகமானவை, மோசமானவை என நேற்றைய மகளிர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற பெண்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்கள் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.

ஜனாதிபதிக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE

JHC Vs KHC BATTLE OF THE HINDUS

JAFFNA HINDU COLLEGE

OFFICIAL MEDIA SPONSOR: உதயன்

@ Kokuvil Hindu College grounds 29th & 30th of March 2008

## இளம் பெண் கடத்தல்; மற்றிருவரும் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்21

வீதியால் சென்ற இளம் பெண்ணைக் கடத்திச்சென்று ஆனைவிழுந்தான் மயானப் பகுதியில் வைத்து தகாத உறவு கொள்ள முயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஏனைய இரு இளைஞர்களும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு இளைஞர்களும் பருத்தித்துறைப் பொலிஸாரினால் பருத்தித்துறை நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (1-218)

## மட்டுவிலில் வீட்டார் நித்திரையில் இருந்த வேளை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.21

வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளையில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பணம், தங்க நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் செல்லப் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்றது. திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி ஒரு லட்சத்து ஆயிரம் ரூபா வென மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (1-207)

## பாஷையூர் அந்தோனியார் ஆலய ஆராதனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்21

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பெரிய வெள்ளி ஆராதனை இன்று காலை 6.15 மணிக்கு நடைபெறும். மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் சிலுவை ஆராதனை வழிபாடும் சிறப்பு வழிபாடாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உடலை இறக்கி ஏற்றும் சிலுவை தியானமும் இடம்பெறும்.

மறுநாள் சனி இரவு 11.15இற்கு திருவிழாத் திருப்பலியும் அடுத்த நாள் உயிர்த்த ஞாயிறு வழிபாடும் காலை 6.15க்கு நடைபெறும். (1-224)


## அச்சுத் தொழில் பயிலுநர் தேவை

கணனி பக்க வடிவமைப்பில், ஓவ்செற் இயந்திரம் இயக்குவதில், புத்தகம் கட்டுவதில் பயிற்சி பெற விரும்பும் -

- யாழ் மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வாழும் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் மட்டும் - 22, 23 ஆம் திகதிகளில்

காலை 9.00 மணிக்கும்
பிற்பகல் 4.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேஸ்,
(Sivaranjanam)
பலாலி வீதி, கோண்டாவில்.

## நினைவுமலர் அட்டைகள்

புத்தம் புதிய பலவர்ண வடிவமைப்பில்

* நினைவுமலர் அட்டைகள்
* அழைப்பிதழ் அட்டைகள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேஸ்
(Sivaranjanam)

தலைமையகம்: பலாலி வீதி, கோண்டாவில்
தொலைபேசி : 021 222 6722

கிளை: 450, K.K.S. வீதி, (யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

# Special Promotion...

**Mp3/ Mp4 Players 1GB**

1.8" - 2.0" - 2.4" TFT Display
Built In Spekers
FM Radio
1.3 ,3.0 M pixel Camera
Mp3,WMV,WAV Audio Files Support
AVI,AMV,SMV ASF, Video Files Support
Photo Viwer,E-Books,Games,
PC Camera,Clander,clock

**Digital Vaice Recgrders 1GB**

Built in Microphone
Recoard The Phone Call Contents
MP3-WMA Playback
Use as removable disk
Recording Time LQ 2000 Minutes, 1GB

**Pentium 4 Computer — 41000/=**
Intel Pentium 4 Processor 3.0Ghz
FoxConMother Board DDR 2
DDR 2 Kingston Ram 512 MB
80 GB Sata Hard Disk
DVD ROM Or CD - R/W
ATX Cashing Black
15" Monitor Sqmsung
Multimedia Key Board
Mouse
Speaker
Free: 1 Bulk Blank CD, Screen Filter, Dust Cover, Mouse Pad

**Pentium 4 Computer — 51000/=**
Intel Pentium 4 Processor 3.0Ghz
GegaByte/Asrock Mother Board DDR 2
DDR 2 Kingston Ram 512 MB
80 GB Sata Hard Disk
Combo Drive Sony
ATX Cashing Black
15" View Sonic SilverBlack Monitor
Power Tree UPS (S650E)
Multimedia Key Board
Mouse
Multimedia Speaker
Free: 1GB Kingston Flash, 1 Bulk Blank CD or PowerExchange Code, Screen Filter, Dust Cover, Mouse Pad

**Pentium 4 Computer — 58000/=**
Intel Pentium 4 Processor 3.0 GHZ
Asus/Asrock MotherBoard-DDR 2
DDR 2 Kingston Ram 512MB
80 GB Sata Hard Disk
DVD Writer
ATX Cashing Black
17" CRT Monitor
UPS
Key Board
Mouse
2.1 Micro Lab Bofer
Fax Modem
Free: Multi Card Reader, 1 Bulk Blank CD, Screen Filter, PowerExchange Code, Dust Cover, Mouse Pad

**Pentium 4 Computer — 57000/=**
Intel Pentium 4- Dual Core Processor
(1.8 Ghz,1MB L2Cash 800Mhz Fsb)
Asus P5GC-Max 1333 Board
DDR 2 Kingston Ram 1 GB
80 GB Sata Hard Disk
DVD Writer SamSung
ATX Cashing Black
17" SamSung / LG CRT Monitor
Power Tree UPS (S650E)
A4 Tuch Key Board
Optical Mouse
Speaker / HeadPhone
Free: 1 Bulk Blank CD, Screen Filter, PowerExchange Code, Dust Cover, Mouse Pad

**Pentium 4 Computer — 74000/=**
Pentium 4-Intel Core 2 Duo Processor
(2.2. Ghz,2MB Cash 800Mhz)
Intel Original Mother Board -DDR2
DDR 2 Kingston Ram 1 GB
160 GB Sata Hard Disk
DVD Writer 20X Sony
ATX Cashing Black
17" LCD Monitor
( View Sonic Wide Screen )
Power Tree UPS (S650E)
Multimedia Key Board
Optical Mouse
Multimedia Speaker
Free: 2GB Kingston Flash, 1 Bulk Blank DVD, PowerExchange Code Or, Dust Cover, Mouse Pad

**Pentium 4 Computer — 75000/=**
Intel Pentium 4 - Dual Core Processor
(1.8 Ghz,1MB L2Cash 800Mhz Fsb)
Asus P5GC-Max 1333 Board
DDR 2 Kingston Ram 1 GB
80 GB Sata Hard Disk
DVD Writer Asus
ATX Cashing Black
15" LCD Monitor
Power Tree UPS (S650E)
USB Key Board
Optical Mouse
Cretive Speaker
Fax Modem
Canon Light25 Scanner
HP D1460 Printer
Free: 2GB Kingston Flash, 1 Bulk Blank DVD, Screen Filter, PowerExchange Code, Dust Cover, Mouse Pad

**FLASH**
1GB Kingston USB - 800/=
2GB Kingston USB - 1350/=
4GB Kingston USB - 2350/=

**PRINTER**
HP 1460 Colour - 5500/=
HP 3940 Colour - 5250/=
Samsung ML 2010 Laser Jet - 15000/=

**HARD DISK**
40 GB IDE - 4000/=
80 GB SATA - 5200/=
160 GB SATA - 6400/=
250 GB SATA - 8750/=

**RAM**
1GB Kingston DDR II - 2350/=
512MB Kingston DDR II - 1500/=

**UPS**
EAST 650W - 5500/=
Mercury 650W - 5600/=
Power Tree - 5800/=

WARANTY உரியபொருட்களிற்கு 1 வருட WARANTY,Service வழங்கப்படும்

**MUSIC WORLD & COMPUTERS**

141B,பலாலி வீதி,தபால் பெட்டி சந்தி,திருநெல்வேலி T.P: 021222 6554

ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்




சுவாமியே சரணம் ஐயப்பா

## பங்குனி மாத உத்தர நட்சத்திர உற்சவம்

இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை உரும்பிராய் சந்தி, சிவதர்மசாஸ்த்தா ஆலயத்தில் மாலை 5.30 மணிக்கு அபிஷேகம், பூசை, பஜனை என்பன நடைபெறும். சரணம் ஐயப்பா

உபயம் - செல்வி ரோகிணி [ஆசிரியை] உரும்பிராய். (72187)

ஆலய குருசுவாமி
வாசுதேவ ஜெயவஸ்த்தல் சுவாமி.

MEDECINS SANS FRONTIERES

## மீண்டும் சேவை ஆரம்பம்

நாம் எமது மகப்பேறு மற்றும் பெண் நோயியல் வைத்திய நிபுணரின் (VOG) சேவையினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையிலும் மீண்டும் ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எனவே மீண்டும் வழமை போன்று சிகிச்சைகளும் கிளினிக்குகளும் தொடர்ச்சியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

மேலும், கடந்த இரு கிழமைகளாக இந்த வைத்திய நிபுணரின் வெற்றிடத்தால் ஏற்பட்ட சிரமங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

எல்லைகளற்ற வைத்தியர் குழு,
பருத்தித்துறை.

(72213)

## பதவி வெற்றிடம்

1. மேற்பார்வையாளர்(ஆண்)
   வயதெல்லை 30-50
   கல்வித் தகைமை - G.C.E. (O/L)
2. காசாளர்(பெண்)
   வயதெல்லை 20-40
   கல்வித் தகைமை - G.C.E. (O/L)
   - கணணி அறிவு

முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 'பொது முகாமையாளர், TCT பல்பொருள் விற்பனை நிலையம், 527, நாவலர் வீதி' என முகவரியிடப்பட்டு 31.03.2008 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

(72226) - முகாமையாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**றஞ்ஜா அருமைத்துரை**

மண் மகிழ 21✱12✱1981
கண் நெகிழ 20✱02✱2008

பூத்துக் குலுங்கிய புதுமலரே - எங்கள் றஞ்ஜா
பாதியில் நீ உதிர்ந்ததால்
பாசக் குலக்கொடிகள் நாம்
பாரினில் பரிதவிக்கின்றோம் - நீ
பாருக்குள் மறையவில்லை
பரமனிடம் சென்றாயோ?
பார்க்காத உள்ளங்கள் நாம்
பதைபதைத்து துடித்து நிற்கின்றோம்
பாரினில் மீண்டும் ஒரு முறை வாராயோ!

இல.103, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.


உன் பிரிவால் துயருறும்
மாமா குடும்பத்தினர்.

(72195)

## மரண அறிவித்தல்

### றிச்சட் பாலேந்திரன் வில்சன்

(பாலா - முன்னாள் ஊழியர் ICRC )



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், றக்கா வீதியை வசிப்பிடமாகக் கொண்ட றிச்சட் பாலேந்திரா வில்சன் 19.03.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசையா வில்சன் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சொலமன் மற்றும் எஸ்தர் தம்பதியினரின் அன்பு மருமகனும், பற்றிமா ராஜினியின் அன்புக் கணவரும் சஞ்சிவன், சந்துரு ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்திராணி, ஜீவரட்ணம் (ஜீவம்), தர்மராஜா (தர்மா), யோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (72227)

தகவல்:
மனைவி.

## சுயதொழில் ஊக்குவிப்பு உதவித்தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு வழங்கப்படும் சுயதொழில் உதவித்தொகை அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதுவரை 10 ஆயிரம் ரூபாவாக இருந்த உதவித்தொகை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

(202-207)

## தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,மார்ச் 21

பட்டதாரிகளை அரசசேவையில் இணைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட முதலாவது திறமைகாண் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க்கிழமை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கிடைத்துள்ளன.

மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் எஸ். திருவாகரன் பெறுபேறுகளை அனுப்பி வைத்துள்ளார்.

(202-207)

## மாதகல் புவனேஸ்வரி ஆலய தேர்வீதி புனரமைப்பு

வலிதென்மேற்கு,மார்ச் 21

மாதகல் பாணா வெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தேர்ஓடும் சுற்றுவீதி கற்கள் பதிக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் பெய்த பெரும் மழையினால் வயல் காணிகளுக்கு ஊடாக செல்லும் தேர்ஓடும் வீதி பெரும் பாதிப்படைந்து சேறும் சகதியுமாக இருந்தது.

ஆலய நிர்வாகத்தினரும் கிராம மக்களும் ஒன்றினைந்து சிரமதானம் மூலம் கடந்த இருதினங்களாக கற்கள் பதித்து தேர் ஓடுவதற்கு வசதியாக செப்பனிட்டுள்ளனர்.

(203-135)




# மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 21

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பெரும் மழையால் பாதிக்கப்பட்ட மேட்டு நிலச் செய்கையாளர்களுக்கும் சிறுபோக கானல்பயிர் விவசாயிகளுக்கும் உரிய நஷ்டஈட்டு நிவாரணத்தை உடன் பெற்றுத் தருமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

என்றுமில்லாதவாறு மழை கடந்த சில நாள்களாக விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

பெரும் பணம் செலவழித்து இன்றைய இக்கட்டான சூழலில் விவசாயிகள் மேற்கொண்ட ஆர்வம் மழுங்கடிக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் வெங்காயம், மிளகாய், புகையிலை, மற்றும் கானல் பயிர்களான எள், பயறு, கௌபி, உழுந்து, குரக் கன் போன்ற பயிர்கள் என்பன அழிவடைந்துவிட்டன.

எனவே பாதிக்கப்பட்ட சகல விவசாயிகளது விவரங்களை உடன் திரட்டி நஷ்டஈடு வழங்க முன்வரவேண்டும் - என்றுள்ளது.

அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி விவசாய காணி அமைச்சுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர், யாழ்.மாவட்ட விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(202-95)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் இருவேறு சம்பவங்களில் ஆறு பேர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருவேறு சம்பவங்களில் ஆறுபேர் காயமடைந்தனர்.

மழை பெய்தவேளையில் மோட்டார் சைக்கிள், மிதிவண்டி ஆகியவற்றில் பயணித்த போது சறுக்கி வீழ்ந்து ஐந்து பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

மிதிவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் சென்றபோது சறுக்கி வீழ்ந்ததில் மீசாலையைச் சேர்ந்த எஸ்.லோகநாதன் (வயது 48), மட்டுவிலைச் சேர்ந்த பொ. கந்தசாமி (வயது 47), நுணாவிலைச் சேர்ந்த கே. இராசரத்தினம் (வயது 43), கைதடி நுணாவிலைச் சேர்ந்த பொ. கோணேஸ்வரன் (வயது 18), கச்சாயைச் சேர்ந்த கே.குமார் (வயது 22) ஆகியோர் காயமடைந்தனர்.

மரத்திலிருந்து வீழ்ந்த தேங்காய் குடும்பஸ்தர் ஒருவரின் தலையை தாக்கிக் காயப்படுத்தியது.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை (வயது 57) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

(202-207)



*யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் புலோலி ஆதார வைத்திய சாலையில் பணிபுரியும் தென் ஸிலங்கையைச் சேர்ந்த 3 வைத்தியர்களும் அண்மையில் பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்திருந்தனர். மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் ஆர். அரியன் ஆச்சிரமத்தினருக்கு வைத்தியர்களை அறிமுகம் செய்விப்பதைப் படத்தில் காணலாம்.* (202)

# கிராமங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலேயே அவை எழுச்சிபெற்று நற்பிரஜைகளை உருவாக்கும்

## பருத்தித்துறை நீதிபதி கருத்து

பருத்தித்துறை,மார்ச் 21

கிராமங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையினாலேயே கிராமங்களில் சட்ட விரோதச் செயற்பாடுகள், சமூகச் சீரழிவுகள் அதிகரிக்கின்றன. கிராமங்களின் தேவைகளை இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் சிறப்பாகச் செயற்பட வேண்டும். கிராமங்களின் கல்வித் தேவைகள் சிறப்பாகப் பூர்த்தி செய்யப்படும்போது கிராம எழுச்சியை ஏற்படுத்துவதோடு சிறந்த பிரஜைகளை உருவாக்கவும் முடியும். மக்கள் அமைதியான வாழ்க்கையை வாழவும் முடியும்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் தெரிவித்தார்.

துன்னாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிபர் எஸ்.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நீதிபதி தெரிவித்ததாவது:

இக்கிராமம் மிகப் பின்தங்கிய நிலையிலிருப்பதையும் இங்கு வாழும் மக்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வதையும் காண முடிகின்றது. இப்பாடசாலையின் அத்தியாவசிய தேவைகள்கூடப் பூர்த்தி செய்யப் படவில்லை. இக்கிராம அபிவிருத்தியில் பாரபட்ஷம் காட்டப்படுவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள் பற்றி அதிபர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் விடுத்த கோரிக்கைகளுக்கு வடமராட்சி வலயக் கல்வி நிர்வாக உத்தியோகத்தர் வழங்கிய பதிலுரை பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இவற்றிற்கு இடமளிக்கக் கூடாது. அப்போதுதான் கிராமிய அபிவிருத்தியை மேம்படுத்தி சமூகச்சீரழிவுகள், சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். கல்விச் சமுக மக்களைச் சிறப்பாக வழி நடத்த வேண்டும்.

### நிலமை இன்று மாறியுள்ளதே

வடமராட்சிப் பிரதேசம் கல்வியில் முன்னணியில் திகழ்ந்த பிரதேசம். கல்வியில் மேம்பட்ட கல்விமான்கள் சமுதாயத்தை வழிநடத்தி சிறப்புப் பெற்ற பிரதேசம். இன்று அந்நிலைமை மாற்றமடைந்திருப்பது கவலைக்குரியது.

ஒருசில பொறுப்பற்ற, தான்தேன்றித்தனமான அதிகாரிகளினால் பலர் பாதிக்கப்பட்டு கல்வியற்ற, காட்டுமிராண்டித்தனமான ஒரு சமுதாயம் உருவாகுவதற்கு இடமளிக்கக்கூடாது. ஒருசில அதிகாரிகளினால் ஏனைய அதிகாரிகளும் வீண்பழிகளைச் சுமக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தக்கூடாது. இந்த அதிகாரிகள் பற்றி உயர்பீடங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தவறின் எதிர்காலச் சமூகம் மிகப்பெரிய கஸ்டங்களுக்குள்ளாகித் தவிக்க நேரிடும்.

அண்மைக் காலமாக துன்னாலை, குடத்தனை, அல்வாய்க் கிராமங்களிலே சமூக விரோதச் செயல்கள், சட்டவிரோதச்செயல்கள் அதிகரித்திருந்தன. இவைகள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கிராமங்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உதாசீனம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

தென்பகுதியிலிருந்து வழங்கப்படும் வளங்கள் ஒழுங்காகப் பகிரப்பட வேண்டும். இவ்வளங்கள் தேவையான பாடசாலைகளுக்குக் கிடைக்காமலும் தேவையற்ற பாடசாலைகளுக்கு அதிகமாகக் கிடைத்தும் வருவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலைகளே கிராமங்களின் சமூகச் சீரழிவுகள், சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கின்றன. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவற்றிற்கு உடந்தையாக இருக்கக் கூடாது.



சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப் பட வேண்டும். இதற்கு சகலரும் ஒத்து ழைப்பு வழங்கவேண்டும்.

### கல்வி மேம்பாட்டில் அதிக கவனம் தேவை

உயர்கல்வி நிறுவனங்களில் பகிடிவதை என்ற பெயரில் நாகரிகமற்ற, அசிங்கமான, வெறுக்கத்தக்க நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இவைகளுக்கு நாகரிகமான கல்விச் சமூகம் இடமளிக்கக்கூடாது. வெளிநாட்டுக் கல்வியை பற்றிப் பெருமையாக பேசிக் கொள்ளும் எம்மவர்கள் எமது நாட்டில் கல்வியின்றிச் சீரழியும் மக்கள் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எமது பகுதிகளில் கல்வி மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். இது இன்று மிக முக்கியமானதாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் அக்கறை கொண்டு செயற்படவேண்டும். அதிபர், ஆசிரியர்கள் தூய்மையான பணியினை அர்ப்பணிப்புடன் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். இன்றைய மாணவர்கள் எமது எதிர்காலச் சந்ததியினர். அவர்கள் அறிவு ஆற்றல்களில் உயர்ந்து வாழ்வு வளம் பெற உழைத்தால் எதிர்காலம் சுபீட்சம் பெறும்-என்றார்.

(202-218)

## ஆனைக்கோட்டைப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்21

சமுர்த்தி உணவு முத்திரை பெற்றுக் கொள்ள வருகை தரும்போது குடும்ப அட்டையின் போட்டோ பிரதி, நிவாரண அட்டை, சமுர்த்தி வங்கிப்புத்தகம், குழு சேமிப்பு பணம் என்பவற்றுடன் வருமாறு பயனாளிகளை ஆனைக்கோட்டை சமுர்த்தி அலுவலகர் கேட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை கிராம அலுவலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் முதல் உணவு முத்திரை வழங்கப்படுகிறது.

உணவு முத்திரைபெற வருகைதரும் போது மேற்படி ஆவணங்களை கொண்டு வருமாறு சமுர்த்தி அலுவலகர் எஸ்.சதீஸ் கேட்டுள்ளார்.

(202-95)

## மானிப்பாய் பிரதேச அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்21

மானிப்பாய் பிரதேசத்தின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பட்டின வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் ந.விவேகானந்தராசா தலைமையில் சோதிவேம்படி வித்தியாசாலையில் பிற்பகல் 4.30 மணிக்கு கூட்டம் இடம்பெறவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி பற்றி முக்கியமாக கலந்துரையாடப்படுவதுடன் புதிய யாப்பு அங்கீகரித்தல், மானிப்பாய் பிப்பிலி மயானம் மற்றும் பிற விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

மானிப்பாய் பட்டின சபைக்குட்பட்ட பகுதியில் வதியும் எவரும் இச்சங்கத்தில் உறுப்புரிமை பெறலாம் என்று தலைவர் தெரிவித்தார்.

(202-95)

## இலவச மருத்துவமுகாமில் தென்மராட்சி மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சி கல்வி வலயமும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் வலயத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் இ.ஜெயபாலன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி முகாமினை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைகள் நலப்பிரிவு மருத்துவர் அருள்மொழி தலைமையில் பத்து மருத்துவர்கள் சிகிச்சைகளை மேற்கொண்டு மருந்து வகைகளை வழங்கினர்.

பல், கண், நீரிழிவு, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டதாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

(202-207)

## சர்வதேச லயன்ஸ் கழக வருடாந்த மாநாடு பாங்கொக் நகரில்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 91 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜூன் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கழக அங்கத்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட ஆளுநர் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202-207)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

பெங்களுர் கலைக்கழகங்களில் உயர் கல்வியை மேற்கொள்வதற்கு இலங்கை மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கான திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத் திகதி மார்ச் 5 ஆம் திகதியுடன் முடிவடைவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(202-302)

# உயிரைக் கொடுத்து உலகை நேசித்தவர்

*கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும் அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை தரும்*

(யோவான் 12:24)

செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும், வானொலிமூலமும் அன்றாடம் கேட்கும், பார்க்கும், வாசிக்கும் செய்திகளில் இறப்பு ஒரு முக்கிய செய்தியாக இருப்பதை நாம் அறிவோம்.

இறப்பு என்பது மனித வாழ்வில் மாற்ற முடியாத ஒரு நிகழ்வு. எந்த ஒரு மனிதனும் தன் வாழ்வில் இறப்பை சந்தித்தே ஆகவேண்டும்.

இறப்பு என்பது மனித குலத்துக்கு பொதுவானதாக இருந்தாலும் எல்லோருடைய இறப்பும் பேசப்படுவதில்லை. ஆனால் வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்கின்றபோது ஒரு சிலரின் இறப்புக்கள் மட்டுமே உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றன. அந்த வகையில்




* கறுப்பின மக்களின் விடுதலைக்காய் போராடிய நெல்சன் மண்டேலா.
* அடிமைகளின் விடுதலைக்காய் பாடுபட்டு இறந்த ஆபிரகாம்லிங்கன்.
* இந்திய சுதந்திரத்திற்காய் போராடி உயிர்த் தியாகம் செய்த காந்தி
* ஏழைகளின் உரிமைக்காய் குரல் கொடுத்த பேராயர் ரொமைரோ

இவர்கள் தங்கள் வாழ்வை ஒரு குறிப்பிட்ட இனத்திற்காக,குறிப்பிட்ட மக்களுக்காக, குறிப்பிட்ட நாட்டிற்காக தியாகம் செய்தவர்கள்.

## இன்று திருப்பாடுகளின் வெள்ளி

ஆனால் இவர்களின் இறப்பைவிட இயேசு கிறிஸ்துவின் இறப்பு உலகளாவிய ரீதியில் இன, மத, மொழி மற்றும் நாட்டு வேற்றுமையின்றி நினைவு கூரப்படுவது ஏன் என்று நாங்கள் சிந்திக்க வேண்டும்?

இயேசுவின் இறப்பு ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, குறிப்பிட்ட மொழிபேசும் மக்களுக்கோ அல்லது குறிப்பிட்ட நாட்டிற்கோ அல்ல மாறாக, இயேசு மனுக்குலத்தின் மீட்பிற்காக தம்மையே அர்ப்பணித்தார். நாம் வாழ்வு பெறும் பொருட்டு சிலுவைச்சாவை ஏற்கும் அளவிற்கு கீழ்படிந்தார்.

இன்று கிறிஸ்துவின் இறப்பை பற்றி சிந்திக்கும் நாங்கள் இயேசு சிலுவையில் தொங்கியபோது கூறிய ''தந்தாய் இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்ற வசனத்தை கிறிஸ்த விழுமியங்களுடன் ஒப்பிட்டு சிந்திப்போம். இயேசு பழிக்கு பழிவாங்கும் கலாசாரத்தை இல்லாதொழித்தார். தன்னை கொலை செய்தவர்களை மன்னித்தார்.

எனவே பழிக்குபழி என்ற எண்ணத்தை விட்டு, ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொண்டு இயேசு காட்டிய விழுமியங்களின் படி வாழ்வோம்.

இலட்சியத்திற்காய் இறப்பது கூட இலகுவாக தெரியலாம்; ஆனால் ஒரு இலட்சியத்திற்காய் வாழ்ந்து மடிவதுதான் வாழ்வின் சாதனை.

அடுத்தவருக்காக கரைந்து மடிகின்ற வாழ்க்கையே நிறைவான வாழ்வு என்பதை இயேசுவின் மரணம் உரத்துச் சொல்லும் உண்மையாகும்.

உயிரை கொடுத்து உலகை நேசித்து மடிந்துபோன இயேசுவின் தியாக வேள்விக்கு நிகரான வேள்வி எது? அன்பிற்காய் எதையும் இழக்கலாம்; ஆனால் எதற்காகவும் அன்பை இழக்கக்கூடாது என்பதே இயேசுவின் கல்வாரிப்பாடமாகும்.

சகோ.ச.அ.செ.றெவல் *(அ.ம.தி)*

# முதன்மை வேட்பாளர் தெரிவில் அரசுத் தரப்புக்குள் இழுபறி!

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிள்ளையான் குழுவையும் இணைத்துக் கொண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள போதிலும் - மூன்று மாவட்டங்களிலும் மாவட்ட வேட்பாளர் பட்டியல்களின் முதன்மை வேட்பாளர்களைத் தெரிவு செய்வதிலும் - மாகாண முதலமைச்சர் வேட்பாளரை அறிவிப்பதிலும் - ஆளும் கட்சித் தரப்புகளிடையே இழுபறி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பிள்ளையான் குழு உட்பட ஆளும் தரப்பில் உள்ள தமிழ்த் தரப்பினர் முதன்மை வேட்பாளராகத் தமிழர்களே அறிவிக்கப்படவேண்டும் என விரும்புகின்றார்கள்.

அதேபோல ஆளும் தரப்பின் முஸ்லிம் பிரமுகர்களும் அப்படியே தமது இனத்தவர்களுக்கு அந்த இடம் அளிக்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றனர். அப்படி இல்லையெனில் தத்தமது இன வாக்காளர்களுக்கு முகம் கொடுக்கவோ, வாக்குத் திரட்டுவதற்காக அவர்களைத் தேடிச்செல்லவோ தங்களால் முடியாது எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# பாக்கியம் பல தரும் பங்குனி உத்தரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகனின் சேவடியைச் சென்னியால் சேவித்து கருதுவார் கருதும் உருவமாகக் கண்டு கரமொட்டி தொழுதேத்தி கருதும் பொருளை அடைய அனுஷ்டிக்கப்படும் விரத விழாக்களுள் பங்குனி உத்தரத் திருநாளும் ஒன்று. இத்திருநாளை கல்யாண சுந்தர விரதம் எனப் போற்றுவர். ஆன்ம ஈடேற்றத்துக்கு சிவராத்திரி விரதம் போல இவ்வுலக லௌகீக வாழ்க்கைக்கு கல்யாண சுந்தர விரதம் உதவுகின்றது.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியான சிவனை தலை மாலை புனை காடுடைத் தலைவனாய், பொன்னார் மேனியனாய், கூத்தப்பிரானாய், மழுவுடை முதல்வனாய், பொங்கரவுச் சங்கரனாய், கங்கை வேணியனாய், பிறைசூடியாய், கறைக் கண்டனாய், பல்வேறு மூர்த்தியாய் கண்டு தரிசிப்பவர்கள் சிவனடியார்கள். அழகொளிர் சுந்தரனாய் ஆனந்த சொரூபியாய் மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நிர்மலனாய் சிற்பரஞ் சோதியாய், சிவானந்தக் கூத்தனாய், சொற்பதங்கடந்த சொக்கனாய், அற்புதனாய், மங்கலம் நிறைந்த சுந்தரேசத் திருவடிவிலும் கண்டு கை தொழுதனர் களிப்பெய்தினர். தேவர்கள் முனிவர்கள் அட்டதிக்குப் பாலகர்கள் புடைசூழ் பரிவாரங்களோடு கல்யாணக் கோலத்தில் மதுரை மாநகரில் பங்குனி உத்தர நாளன்று அமர்ந்திருந்தார் எம் அரனார்.




உலக மாதா மீனாட்சி அம்மையாய் மதுரையம் பதியில் வீற்றிருந்தாா். பங்குனி உத்தரத்தன்று கல்யாண சுந்தரேஸ்வரப் பெருமான் மீனாட்சியம்மையைக் கடிமணம் புரிந்து கொண்டமையால் இத்தினம் மேன்மை பெறுகின்றது.

புண்ணிய காலங்களில் புனித தீர்த்தமாடி சொக்கனை வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுய்யலாம். சொக்கர் என்ற ஒரு தரம் ஓதினால் இடர் கெடும். பகை மாளும் வசை போகும். நீங்காத செல்வம் நிறையவே கிடைக்கும் பரகதியும் அடையலாம் எனப் புராணங்கள் புகழ்ந்துரைக்கின்றன. இத்தகைய மேலான பல சிறப்புக்கள் பெற்றுயர் திருத்தலமாம் மதுரையில் தெய்வத் திருமணம் நிறைவேறிய தங்கத் திருநாளே பங்குனி உத்தர தினம்.

கோதண்ட வில்லை வளைத்து கோதை சீதையை இராமன் கைத்தலம் பற்றிய நாளும் பங்குனி உத்தரத் திருநாளென்பர். தெய்வத் திருமணங்கள் நிறைவேறிய மங்கலத் திருநாளானதாலும் பங்குனி மாதத்தில் மீனராசியிற் பூமி நிற்க கன்னி ராசியில் சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கூடி நின்று பூரணக்கலை பெற்று ஏழாம் பார்வை யாகப் பூமியைப் பார்ப்பதாகச் சோதிடம் சொல்வதாலும் இத்தினம் அதி விஷேடம் பெறுகின்றது.

பங்குனி உத்தரத் திருநாளை விரதமாகக் கொண்டு தொழுது வந்தால் சகல பாக்கியங்களும் இந்தச் செகத்தில் பெற்றுய்யலாம் என்று உபதேசக் காண்டம் கூறுகின்றது.


இவ்விரதத்தை பயபக்தியோடு அனுஷ்டித்து பார்வதி, பரமேஸ்வரன் புகழ்பாடி அவர்கள் கழல்கள் நாடி சகல பாக்கியங்களையும் பெற்று வாழ்வோமாக.

- கந்த.தியாகராசா

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர், சாரங்கன் நகைமாடம்)



மலர்வு 11.01.1970

உதிர்வு 13.04.2006

திதி: பூரணை

அருமை மகனே! ஆருயிர் சோதரனே!!
ஆண்டுகள் இரண்டாகியதோ உங்களைப் பிரிந்து
நீண்ட நினைவுகளை - எம்
நெஞ்சங்களில் சுமக்கவைத்து
நீங்கள் பிரிந்துபோனதேனோ?
நாளும் பொழுதும் உங்கள் நினைவினிலே நாங்கள்...
வாடும் நெஞ்சங்களாய்... கனன்று கொண்டிருக்கின்றோம்.
பாச நெஞ்சங்களைப் பிரியவைத்து
வேடிக்கைபார்ப்பது இன்று விளையாட்டாய்...
படைத்தவன் தேவையென்றா பாதியிலே அழைத்துவிட்டான்
வளர்த்தவர்கள் நாமின்று கலங்குகின்றோம்
மீண்டும் ஒரு பிறப்பினிலே - நீங்கள்
ஆசை மகனாய் அருமைச் சோதரனாய்
நேசமுள்ள எம் குடும்ப உறவாய்
வந்து பிறந்திடுங்கள்...
எங்கள் இதயக் கோயிலிலே
உங்களை இறைவனாய் இருத்தி
என்றும் பூஜிப்போம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டி வீதி,
சாவகச்சேரி. [சி/551920]

குடும்பத்தினர்.



வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையும் அ.மி.த.க. பாடசாலையும் இணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் மாணவர்களின் பழம் பொறுக்கும் போட்டியை முதலாவது படத்திலும் ஓட்டப் போட்டியை இரண்டாவது படத்திலும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பருத்தித்துறைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பா.இரகுநாதன் பரிசில்கள் வழங்குவதை கடைசிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# யூனியன் கல்லூரியை சென்.பற்றிக்ஸ் இன்னிங்ஸால் வென்று அசத்தியது

## நவதீபன் சதம்; சதானந்தன் 7 விக்கெட்டுகளைச் சாய்த்தார்

வலி.வடக்கு,மார்ச்21

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆட்டமொன்றில் ஒரு இன்னிங்ஸினாலும் 132 ஓட்டங்களினாலும் வெற்றிபெற்றுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஜான்சன் 17, இராகுலன் 16, அஜந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

றெக்னோ 14 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும் பிரசன்னா 30 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 81 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய பி.நவதீபன் 102, ஆர்.றெக்னோ 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

காந்தசீலன், ஜான்சன் தினேஸ்கரன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 34.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தினேஸ்கரன் 21, பிரசாந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய வை.சதானந்தன் 08 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு 07 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

மற்றும் றெக்னோ, மிலாண்டோ, நிலக்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (1-86)

## உதைபந்தாட்டச் சம்மேளன போட்டிகள் யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு,மார்ச்21

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் 15, 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாத இறுதியில் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்.மாவட்டத்தின் பாடசாலைகள் உரிய விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

உரிய விண்ணப்பங்களை ''இணைப்பாளர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (1-86)

# யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது சென்.ஜோன்ஸ்

வலி.வடக்கு,மார்ச்21

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுக் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்பத்தில் இன்னிங்ஸ் ஆட்டமாக ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இடையில் மழை குறுக்கிட்டதைத் தொடர்ந்து 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டமாக இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

விதுசன் 51, கவிபிரவீன் 25, யோகேஸ்வரன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கஜந்தன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் நிகிதன் 38 ஓட்டங்களைக்கு 02 விக்கெட்டுகளையும் ஸ்ரீகுகன், பிரசாந் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 44.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஸ்ரீகுகன், கோமளவரதன் தலா 16 ஓட்டங்களையும் பிரசாத் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அச்சுதன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கவிவதனன் 07 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 09 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கனுஷன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் தவநீதன், எலோன்சன் தலா ஒரு விக்கெட்டையும் விதுசன் மூன்று பந்துகள் வீசி 02 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (1-86)

# காரைநகர் பிரதேச செயலக மென்பந்தாட்டம்; கேடயத்தைக் கைப்பற்றியது சோலையான்

வலி.வடக்கு,மார்ச்21

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் சோலையான் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

காரைநகர் சிவகௌரி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும் கோவளம் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சோலையான் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் எட்டு ஓவர்களில் 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோவளம் விளையாட்டுக் கழகம் 33 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (1-86)

# பல்கலைக்கழகம் - கல்வியியல் கல்லூரியின் விறுவிறுப்பான உதைபந்தாட்ட மோதல்

வலி.வடக்கு,மார்ச்21

யாழ்ப்பாணம் பல்கலைகழகத்திற்கும் யாழ்.கல்வியியற் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

ஆட்டம் தொடங்கி முதல் பாதி ஆட்டம் நிறைவுற்றவேளையில் பல்கலைக்கழக அணி ஒரு கோலை தண்டனை உதை மூலம் பெற்று முன்னிலையில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய சிறிதுநேரத்தில் மேலும ஒரு கோலைப பல்கலைக்கழகம் போட்டது. ஆட்டம் நிறைவுபெற சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் கல்வியியற் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டது.

இரு அணிகளும் தொடர்ந்து கோல்கள் பெறாத நிலையில் பல்கலைக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் கல்வியற் கல்லூரியை வெற்றிகொண்டது. (1-86)

# வடமராட்சி வலய மட்டக் கரப்பந்தாட்டம்; அமெரிக்கன் மிஷன் 3 பிரிவுகளில் சம்பியன்

யாழ்ப்பாணம்,மார்ச்21

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மூன்று பிரிவுகளில் சம்பியனாகத் தெரிவானது.

ஆண்கள், பெண்கள் அணிகள் என இடம்பெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:

**பெண்கள்**

* *15 வயதுப் பிரிவு* - நெல்லியடி ம.ம. வித்தியாலயம், வடமராட்சி ம.மகளிர் வித்தியாலயம், வட.இந்து மகளிர் கல்லூரி.

* *17 வயதுப் பிரிவு* - பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

* *19 வயதுப் பிரிவு* - பரு.பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட.இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**ஆண்கள்**

* *15 வயதுப் பிரிவு* - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி.

* *17 வயதுப் பிரிவு* - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலை, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளையார் ம.வித்தியாலயம்.

* *19 வயதுப் பிரிவு* - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி.

மேற்படி போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் வடமராட்சி வலய உடற்பயிற்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் வ.வல்லிபுரம் அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றன. (1-70)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மார்ச்21

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் றோட்டரக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் அமரர் றொகான் இராஜசிங்கத்தின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்திவரும் ஹொக்கி சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அணி (ஊதா) எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

* தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் அணி எதிர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி (வெள்ளை) அணி.

* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி. (1-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்.21

நியூ பவர் வேள்ட் மற்றும் பியூட்டி செலக்சன் ஆகியன இணைந்து யாழ்.பல்கலைக் கழக கூடைபந்தாட்டத் திடலில் நடத்திவரும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பமிலியன்ஸ் வி.கவும் வட்டபிளை வி.கவும் மோதுகின்றன. (1)

## வடமராட்சி தென்மேற்கில் நாளை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மா[illegible]21

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும் ஓய்வுபெற்ற மாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே. டபிள்யூ. விமலராஜனும் யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.துரைசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ள உள்ளனர்.

இவ்விழாவில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றின் இறுதி ஆட்டங்களும் தடகள நிகழ்வுகளும் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் இடைவேளை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (1)

அம்பாள் துணை



# கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோ

# புனராவர்த்தன அஷ்டபந்தன ந

# மஹா கும்பாபிஷே

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

அம்பிகையடியார்க்கு

நந்தாவில் பதியில் நீண்ட காலமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் மனோன்மணி அம்பாளுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத்தருகின்றது.



லோகமாதாவாகிய அன்னை இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு மனோன்மணி அம்பிகையாக வீற்றிருக்கின்றார். அம்பிகையைச் சரண டைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற வகையில் அம்பிகையின் வழிபாடு மனித வாழ்வை உயர்நிலை அடையச் செய்கின்றது. தாயினுடைய அன்பை அனு பவிக்காத உயிர்கள் இவ்வுலகத்தில் இல்லை. இதனுடைய அடையாளமாகவே நம் சமயம் எதையும் சக்தி வடிவமாகக் கொண்டுள்ளது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றவகையில் பல நிறைவான ஆலயங்களைக் கொண்ட பிரதேசம் கொக்குவில் பகுதியாகும். இவ்வாலயத்தில் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தை செய்வதும் செய்விப்பதும் பார்த்து அனுபவிப்பதும் புண் ணியப்பேறாகும். இந்த ஆலயம் பல வளர்ச்சிகளைக் கண்டு நிறைவாக விளங்குவது இவ்வூர் மக்களுடைய ஆன்மீகச் சிந்தனையை வெளிப்படுத்துவதாகும். தொடர்ந்தும் இப்பணியைச் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*


ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## பிரதிஷ்டா பிரதமகுருவின் குரு ஆசியுரை

பக்த அடியார்களுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள். சீரும் திருவும் பொலிய சகல வளங்களுடன் வீணாகானபுரி என விளங்கும் இலங்காபுரியின் வடபால் யாழ்ப்பாணத்தின் மத்தியஸ்தானத்தில் கொக்குவில் நந்தாவில் கற்புலத்துப் பதியில் சக்தி பீடங்களில் ஒன்றான மனோன்மணி அம்பிகை யின் திருக்குட திருமஞ்சண பெருவிழாவானது சுபகரண சுப முகூர்த்தத்தில் இன்றைய தினம் நடை பெறுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைவதுடன் இப்புண்ணிய கைங்கரியத்தை முன்னின்று நடத்திய ஆலய தர்ம பரிபாலன சபையினருக்கும் கொக்குவில் ஊர் மக்களுக்கும் அந்நிய தேசத்தில் வாழும் அம்பிகையின் அடியவர்களுக்கும் அனைத்து இந்து வாழ்மக்களுக்கும் திருப்பணி கைங்கரியத்திற்கு நிதியுதவி, சரீர உதவி வழங்கிய அடியவர்களுக்கும் அம்பிகையின் திருவருட் கடாட்சம் என்றென்றும் கிடைக்கவேண்டும் என்று அம்பிகையின் திருப் பாதங்களை இறைஞ்சி குரு ஆசி கூறி அமைகின்றேன்.

*"சர்வே ஜனாக சுகினே பவந்து*
*சுமஸ்தா தன் மங்களானி பவந்து"*
*சுபமஸ்து.*

பிரம்ஸ்ரீ சபா.ஸ்ரீசந்தனக்குருக்கள்,
தேவஸ்தான பிரதமகுரு,
நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.



இன்று (21.03.2008)


## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசிச்செய்தி



அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேக திரு விழா நடைபெற இருப்பது குறித்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன். ஆலயங்கள் புனிதம் அடைந்து அடியவர்களின் அக இருளை அகற்றவேண்டியது அவசிய மாகும். தெய்வ நினைப்போடு மக்கள் வாழ்வார்களானால் தீமை இல்லை. எம்முன் னோர்கள் நிம்மதியும் நிறைந்த வாழ்வும் பெற்றமைக்குத் தெய்வ நம்பிக்கைக்கு முதன்மை கொடுத்தமையே காரணம் எனலாம். கோவில்களில் சீரே கோவில் களைச் சார்ந்து வாழும் அன்பர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தும். அருட் சிறப்பு மிக்க அம்பாளின் கும்பாபிஷேகம் சிறக்க எல்லாம்வல்ல அன்னை ஈஸ்வரியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

## அம்பாளின் அருள்மழையில் நனைய நாடி வாருங்கள்

எல்லாவளமும் நிறைந்த எழில்மிகு திருவூர் கொக்குவில். இத்திருவூரில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் திருக்கோவில் விருட்சமாக எழுந்து அருள் பாலிப்பது பெருமைக்கு உரியது. பல வூரில் பெய்தமழை நந்தாவில் குளத்தை நாடித் தேடிச் செல்வது வழக்கம்.



அதேபோல் பலவூர்களில் வாழும் பக்தர்களும் கற் புலத்து மனோன்மணி அம்பாளின் அருள் மழையில் நனைவதற்காக நாடித் தேடிச் செல்வர். அற்புதம் நிறைந்த அம்பாள் அடியார் குறை தீர்க்கும் அபயலட் சுமி. இப்பெருமாட்டியின் பேரருள் சிறப்பைப் போற் றாதவர்களில்லை. இத்திருக்கோவிலைச் சார்ந்த மீளா அடியவர்கள் காலத்துக்குக் காலம் ஆலயத்திருப் பணிகளை நிறைவேற்றி புனிதமாகப் பேணிவருவது சிறப்புக்கு உரியது. அவ்வகையில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு இன்று அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நிறைவேற இருப்பது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன்.

நந்தாவில் அம்பாளின் கும்பாபிஷேகத்துடன் நாடு விடிய வேண்டும் என அனைவரும் நம்பிக்கை கொண்டு வணங்குவோம். எல்லாம் வல்ல மனோன் மணித்தாயின் திருவருள் அனைவரையும் ஆற்றுப்படுத்தப் பிரார்த்தித்து இத்திருப்பணியில் அயராது உழைத்த அடியார்களுக்கும், கலைஞர்களுக்கும் நல்லாசி கூறி அமைகிறேன்.

செஞ்சொற் செல்வர்- ஆறு.திருமுருகன்

## பக்தர்களுக்கு அபயமளிக்கும் மனோன்மணி

எங்கள் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயமானது மஹா கும்பாபிஷேகம் காணுவதையிட்டு எமது பக்தர்களுடன் இணைந்து நானும் பூரிப்படை கின்றேன்.

''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றனர் நம் ஆன்றோர். அந்தவகை யில் நம் ஊரின் நடுவனாக வரலாற்றுப் புகழ் படைத்து வயல் நிலமும் குடிநிலமும் புடை சூழ பாரிய விருட்சங்கள் சூழ்ந்திருக்க ரம்மியமான கோபுரத்துடன் மிக அழகாகக் காட்சிய ளித்து பக்தர்களுக்கு அருள் பாலித்து அபயமளித்து காத்துக் கொண்டுள்ளாள் நம் அம்பிகை.

''ஊரின் சிறப்பு ஆலயச் சிறப்பாகும்'' இப்பாக்கியத்திற்கு அமைய நானும் இவ்வூரிற்கு கிராம அலுவலராகக் கடமையேற்று வந்தேன். வந்த சில நாள்களிலேயே ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் பாத யாத்திரையின் ஒரு பகுதியாக ஓர் இரவு நமது கோவிலிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்விலேயே நானும் எனது ஆன்மீக முதல் உரையினை நிகழ்த்தும் அருள் வாய்ப்புக் கிடைத்தது.

இவ்வாலயமானது இளம் வயதினரின் திருமண வாழ்விற்கான திருமண மண்டபத்தி னையும், அதேநேரம் இளம் பாலகர்களின் விளையாட்டுப் போட்டிகள் நிகழ்த்தும் திருவீதி யினையும் அறிவை வளர்க்கவும் நற்பொழுதைப் போக்கவும் உகந்த மனோன்மணி சனசமூக நிலையம் என்பவற்றையும் தன்னுள் அடக்கியுள்ளது மேலும் சிறப்பானதாகும்.

கிராம அலுவலர் என்ற ரீதியில் மேலும் சொன்னால் இவ்வளவு சிறப்பிற்கும் காரணமாக அமைந்தவை நற்பண்புள்ள இளைஞர்களும் அவர்களை வழிநடத்திச் செல்லும் பரிபாலன சபையினரும் முக்கியமாக நித்திய, நைமித்திய கிரியைகளை பக்தியுடன் செய்யும் சிவாச்சா ரியர்களும் ஆகும். இத்தனை சிறப்புகளும் மிகுந்த இவ்வாலயமானது புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் கண்டுள்ளமை எம் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. எனவே இவ்வாலயம் சமய வகுப்புகள் மற்றும் பக்திமிக்க பஜனைகள், குரு பூஜைகள் என்பனவற்றை நடத்துவதன் மூலம் சைவசமயத்தின் புகழை வளர்க்க அரும் பாடுபட வேண்டும் என்பதுடன், அதற்கு எல்லாம்வல்ல அம்பிகையின் அருட்பார்வை கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கு.சாந்தமோகன்,
கிராம அலுவலர், கொக்குவில் மத்தி, கிழக்கு.

## அன்னை

இ

*தனம் தரும் கல்*
*ஒரு நாளும் தளா*
*தெய்வ வடிவுந்*
*நல்லன எல்லாம்*

கொக்குவில் கிழ
பாலிக்கும் கற்புலத்
பொலிவோடு கும்ப
மட்டில்லா மகிழ்ச்சி
சிறப்புற அமைய கற்
யும் வேண்டி நிற்கி
விழுதுபோல அடிய
அவர்களை விழுது
தாய். அதனால்தான்
அடிபணிய அவளின்

அடியவர்களது
மனோன்மணி அம்பா
அவன் ஆலயத்தி
அடியவர்கள் விரும்
ஆலயம் அழகிய
களுக்கெல்லாம் மன
பக்திப் பொலிவும்
அம்பாளின் ஆலயத்தி
வாழ்த்துவதோடு அ
கிடைக்க அவள்பாத

இந்துசமய




## நாடிவரும் அடியவர்க்கு தேடி வரம் அருள்பவள்

கற்புலத்து மாணிக்கமாய் கருணைமலர் தேனமுதாய் அற்புதங்கள் தனை நிகழ்த்தும் ஆனந்த பைரவியாய் கொக்குவில் கிழக்கு நந்தாவில் பதியிலே அருளாட்சி புரிகின்ற மனோன்மணி அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற அமைய திருவருள் கைகூடியமையிட்டு அகமகிழ்வுறுவதோடு அவள் பாதம் பணிகின்றேன்.

ஆன்மாவை ஆண்டவன் இடத்தின்பால் லயப்பட வைக்கின்ற புனிதமான இடமாகத் திகழு கின்ற ஆலயத்தின் திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு எமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு என்பது மிகப்பெரும் வரப் பிரசாதமாகும். நாடிவரும் அடியவர்க்கெல்லாம் தேடி வரம் அருள் பவளாய் ஆதி பராசக்தியாய் அகிலமெல்லாம் அருள் பாலிக்கும் அம்பாளின் அருட் பார்வை யாலேயே இந்தத் திருப்பணி வேலைகள் காலக்கிரமத்தில் சிறப்பான முறையில் நிறைவு பெற்று இன்றைய தினம் கும்பாஷேக பெருவிழாவை நிகழ்த்துவதற்குத் திருவருள் கைகூடியுள்ளது.

அம்பாளது ஆலயத்தினை அழகுபடுத்திப் பார்க்க வேண்டும் என்ற அடியவர்களது நீண்ட கால விருப்பம் அவளருளாலே நிறைவேறியிருக்கிறது. இத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்கு எமது பரிபாலன சபை முயன்ற போது அதற்குப் பெருமகிழ்வோடு ஆதரவு நல்கி ஊக்கமளித்த உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் அம்பிகையின் அடியவர் களை நாம் இந்த வேளையில் நினைவிற் கொள்ளல் வேண்டும். அது போல எமது வேண்டு கோளை ஏற்று உரியகாலப் பகுதிக்குள் ஆகம விதிகளுக்கமைய சிறப்பான முறையில் புனருத்தாரணம் செய்துதவிய சிற்பக் கலைஞர்களையும் அவற்றுக்கு அழகான முறையில் வர்ணம் தீட்டி பக்திபூர்வமான தோற்றத்தை ஏற்படுத்திய ஓவியக் கலைஞர்களையும் நன்றி யோடு நினைவிற்கொள்கின்றோம். இத்தனைக்கும் மேலாக எமக்கு தேவையான ஆலோ சனைகளை வழங்கி ஆலய புனருத்தாரண வேலைகளுக்குத் தேவையான விதிமுறைகளை வகுத்தளித்த அந்தணப் பெரியோர்களையும் எமது பரிபாலன சபை சார்பில் நன்றியோடு நினைவிற் கொள்வதோடு இத்திருப்பணி வேலைகளுக்காக எமக்கு சகல வழிகளிலும் ஒத்து ழைப்பை நல்கிய நல்லுள்ளங்களுக்கு எல்லாம் வல்ல கற்புலத்து மனோன்மணி அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி அவள் பாதம் பணிகின்றேன்.

*அவள் அருளாலே அவள் தாள் வணங்குவோம்.*

*சி.ஜெயபாலசிங்கம் செயலாளர்,*
*நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம், கொக்குவில் கிழக்கு.*

## பேரருள் கிடைக்க வேண்டும்

*நந்தாவில் கற்புலத்து நாயகியே உமா*
*இந்தா வென்றெனக்கருள் இரங்கிடுவாய் அம்மா*
*செந்தாமரை முகத்தோய் ஜெகதீஸ்வரி தேவி*
*நிந்நாளை நாம்துதிக்க நீயும் அருள்வாய்*

இலங்கையிலுள்ள புகழ்பெற்ற அம்மன் ஆலயங்களில் கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாக அமையப்பெற்ற தொன்மைமிகு ஆலயமாகும். இங்கு எழுந்தருளியுள்ள அன்னை மனோன்மணி தன்னை நாடிவரும் அடியவர் இடுக் கண் விலக்கித் துயர் போக்கி அருளை வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாலயத்தில் காலத்திற்கு காலம் திருப்பணிகளும், புனரமைப்பு வேலைகளும் நிறைவேற றப்பட்டுக் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டுவருகின்றது. கும்பாபிஷேகம் செய்வதன் மூலம் எழுந்தருளியுள்ள மூர்த்தியில் தெய்வசாந்நித்தியம் அதிகரிக்கும் என்பது சைவ ஆகமக்கூற்று. இந்த வகையில் 1995ஆம் ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திருப்பணிகளும், புனரமைப்பு வேலைகளும் ஆல யத்திற்குப் புதுப்பொலிவையும் அழகையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் இன்று இராஜகோபுரத்திற்கும், தூபிகளுக்கும், மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை காணும் பேறு பெற்றவர்கள் பாக்கியசாலிகள் என்பதை உணர்ந்து, நாமெல்லோரும் மகாகும்பாபிஷேகத்தைக் கண்ணாரக்கண்டு, வாயார வாழ்த்தித் தலையாரக் கும்பிட்டு அன்னை அருளைப் பெறுவோமாக! இப் புண்ணிய கைங்கரியம் சிறப்புற அமைய உழைத்த அனைவருக்கும் அன்னை மனோன்மணியின் பேரருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக் கின்றேன்.

*சி.மாதவகுமாரன், தலைவர், நந்தாவில் கற்புலத்து மனோன்மணியம்பாள்.*

## அன்னையவள் அடி பணிந்து இறைஞ்சுவோம்

*ம் தரும் கல்வி தரும்*
*நாளும் தளர்வறியா மனம் தரும்*
*ய்வ வடிவுந் தரும்*
*லன எல்லாம் தரும்.*

க்குவில் கிழக்கு நந்தாவில் பதியில் வீற்றிருந்து அருள் கும் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் ஆலயம் புதுப் வோடு கும்பாபிஷேகப் பெருவிழாக் காண்பதையிட்டு லா மகிழ்ச்சியடைவதோடு கும்பாபிஷேகப் பெருவிழா அமைய கற்புலத்து மனோன்மணி அம்பாளின் அருளை வண்டி நிற்கின்றோம். விருட்சத்தை தாங்கி நிற்கும் போல அடியவர்கள் பெருவிருட்சமாக வளர்த்துவிட்டு ளை விழுதுபோல நின்று காத்தருள்பவள் மனோன்மணித் அதனால்தான் அந்நிய தேசம் சென்றாலும் அன்னையவள் ணிய அவளின் அடியவர்கள் தவறவில்லை.

யவர்களது அழகினையும் மகிழ்வினையும் கற்புலத்து ன்மணி அம்பாள் விரும்புவதைப் போலவே அம்பாளை யும் ஆலயத்தினையும் அழகுபடுத்திப் பார்க்க அவள் ர்கள் விரும்பியதால் இன்று மனோன்மணித் தாயின் அழகிய தோற்றத்தோடு பக்தி பூர்வமாக அடியவர் கல்லாம் மன நிறைவைக் கொடுத்து நிற்கின்றது. புனிதமும் பொலிவும் கொண்டு திகழும் கற்புலத்து மனோன்மணி ின் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற அமைய வதோடு அம்பாளின் அருட்கடாட்சம் அனைவருக்கும் க அவள்பாதம் பணிகிறோம்.

நா.பேரின்பநாயகம், தலைவர்,
இந்துசமய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் கிழக்கு.

## மனோன்மணி சனசமூக நிலையத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பழமையும், புதுமையும் நிறைந்த எமது கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலயம், கும்பாபிஷேக குடமுழுக்குவிழா காண் பதையிட்டு மனோன்மணி சனசமூக நிலையத்தினராகிய நாம் மட்டில்லா மகிழ்வடைகின்றோம்.

அம்பாளது திருவீதியில் அவளது திருநாமத்தோடு சமயம் மற்றும் சமூகப்பணிகளை ஆற்றுவதற்கு எமக்கு கருணை புரிபவள் கற்புலத்து தாயே என்றால் அது மிகையாகாது. எமது கொக்குவில் பிரதேசத்தின் அழகே அம்பாளது ஆலயமும், ஆலயத்திலிருந்து அருள்பாலிக்கும் கற்புலத்து மனோன்மணி அம்பாளும்தான் கருணை நிறைந்த பார்வையால் தன் அடியவர்க்கெல்லாம் அபயமளிக்கும் அன்னையின் ஆலயத் தைப் பார்க்கும் போதும் *"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே..."* என்ற அடிகளே அடியவர்களின் நெஞ்சில் தோன்றும்.

இத்தனை சிறப்புகள் மிக்க எமது கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலயத்திற்கு கும்பாபிஷேகப் பெருவிழாவை நடத்துவதற்குக் கிடைத்திருக்கும் திருவருளை எண்ணி அம்பாளின் பாதங்களைப் பணிவதோடு, விழா சிறப்புற அமைய எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

"என்னை இறைவன் நன்றாகப் படைத் தனன் தன்னை
நன்றாக தமிழ் செய்யுமாறே"

சா.சுயந்தன்,
*தலைவர்,*
*கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம்,*
*கொக்குவில் கிழக்கு.*

## மக்களை நெறிப்படுத்தும் பரிபாலனசபை

ஈழத்திரு நாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் மத்தியில், நல்லூர் பிரதேசத்தின் கொக்குவில் பதியில் வீற்றிருந்து, அருள்பாலித்துக் கொண்டி ருக்கும் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கும்பா பிஷேகக் குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதை யிட்டு பெரும் மகிழ்வடைகிறேன்.

எமது நல்லூர் பிரதேசமானது ஆலயங்களால் சூழப் பட்டு ஆன்மீக மணம் பரப்பிக்கொண்டிருக்கும் ஒரு புனிதமான இடமாகத் திகழுகின்றது. அப்படிப்பட்ட இப்பிரதேசத்திற்கு மேலும் மெருகூட்டுவதுபோல கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் கும்பா பிஷேக நிகழ்வும் அமைகிறது.

சமூகத்தில் புரையோடிப்போயுள்ள அநீதிகளையும், சீரற்ற வாழ்வியல் முறைகளையும் மாற்றியமைப்பதற்கு ஆன்மீக வழிமுறையானது மிக முக்கியமானதாக அமைகிறது.

எனவே இவ் ஆன்மீக ஈடுபாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான வழிகளாகத் திகழும் ஆலயங்கள் புனிதப்படுத்தப்பட்டு மக்களை நெறிப்படுத்தும் களங்க ளாக அமையவேண்டும், அதற்கு ஆலயங்களை பரிபால ணம் செய்யும் சபைகள் பாரிய பங்காற்ற வேண்டும். அத்த கைய சமூகப் பணியை நந்தாவில் கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை செய்வதையிட்டு அவர்களைப் பாராட்டுவதோடு, அவர்களால் முன்னெடுக்கப் பட்ட இக்காரியங்கள் சிறப்பாக அமைய அம்பாளைப் பிரார்த் தித்து, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்தமைகின்றேன்.

சி.எ.மோகன்றாஸ், *பதில் பிரதேச செயலர், நல்லூர்.*

உ

அருள்மிகு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

# மணவாளக் கோல விழா

**இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு**
மூலமூர்த்திக்கு 1008 (பஞ்சகுண்ட) அபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும்.

**நண்பகல் 12.00 மணிக்கு**
காலை நிகழ்வுகள் நிறைவுபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**மாலை 3.00 மணிக்கு**
மாலை உற்சவம் ஆரம்பமாகும்.

**மாலை 4.00 மணிக்கு**
வசந்தமண்டபப் பூசையும் சிறப்பு அலங்காரத்துடன் சுவாமி திருவீதியுலாவும் இடம்பெறும்.

மங்கள இசை வழங்குவோர்: M.P. பாலகிருஷ்ணன் அவர்களுடன் S.T. சுந்தரேசன் குழுவினர்.
ஆனந்தக் காவடி நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

**அனைவரும் வருக! அருளமுதம் பெறுக!**

(சி/551903) **ஆலய பரிபாலன சபையினர்.**

## நிவாரண விநியோகம்

நவாலி, மார்ச்21

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகள் மூலம் உலக உணவு ஸ்தாபனத்தின் நலிவுற்றோர் நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (202-100)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து ஆண்டு பங்குனித்திங்கள் 08ஆம் நாள் (21.03.2008) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 8.10 மணி வரையுள்ள உத்தர நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின்
செல்வப்புதல்வன் திருநிறை செல்வன்
**பகீரதன்**
அவர்களும்

திரு.திருமதி குலவீரசிங்கம் மகாலட்சுமி தம்பதியரின்
செல்வப்புதல்வி திருநிறை செல்வி
**ஜெயஸ்ரீ**
அவர்களும்

தெய்வத் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிட்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமணம் நடைபெறும் மண்டபம்:**
**Tooting முத்துமாரி அம்மன் கோயில் மண்டபம்**
**180, 186, Upper Tooting Road, Tooting, London SW 17 7EJ.**

**தங்கள் நல்வரவை இனிதே நாடும்:**

திரு. திருமதி
**சுப்பிரமணியம் குடும்பத்தினர்,**
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி, இலங்கை.

திரு. செ.குலவீரசிங்கம்
**குடும்பத்தினர்,**
வேலணை வடக்கு,
வேலணை, இலங்கை.

(இருவீட்டார் அழைப்பு) (72161)

## ஓராண்டு நினைவினிலே.....



மலர்வு: 08.12.1977 உதிர்வு: 03.03.2007

அமரர்

# ஜெயராசலிங்கம் பிரதீபா

ஆசைக்கொரு மகளாய்
அவனியிலே வந்துதித்த பாசமலரே என் பிரதீபா- எங்கள்
தீப ஒளியை இழந்து நாம் தவிக்கின்றோம்
கண்ணான மன்னவன் கணவன் நான்
கலங்கித் துடிக்கின்றேன் நாளும் உன் நினைவில்.....
பெற்றோருக்கு ஒரு மகளாய் பிறந்த நீ- உன்
வாரிசுக்காய் ஒரு மகனாம் கிருசாளைத் தந்துவிட்டாய்
அன்னை உன்முகம் காணாமல்
தாயிழந்த கன்றாய் தவிக்கின்றான் கிருசா- உன்
உதிரத்து உறவுகள் நாம் செய்த பாவம்தான் என்ன?
வாழ்கின்ற வயதிலே சாவுன்னை அணைத்ததுவோ?
பாச நெஞ்சங்களைப் பிரியவைத்து
வேடிக்கை பார்ப்பது தான் இயமதர்மா உன் விளையாட்டா?
என் செல்வமே!
ஆசைமகளாய், அன்புமனைவியாய், பாச அன்னையாய்,
நேசமுள்ள சோதரியாய் மீண்டும் நீ வந்து பிறந்திடம்மா
எங்கள் ஆயுள் உள்ளவரை- என்
இதயக் கோயிலிலே உன்னை நாம்
இறைவனாய் ஏத்தி நிற்போம்- நாளும்
"ஆசிகள்" தந்து எம்மை ஆற்றுப்படுத்திடம்மா!

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (72210)

**கணவர், பிள்ளை, அம்மா, அப்பா, சகோதரர்கள், மாமன், மாமி.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

# கனகரெட்ணம் சுரேஸ்குமார் (சுரேஸ்)

## (அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம், கச்சேரியடி)



ஜனனம்: 01.10.1980 மரணம்: 04.03.2007

ஓர் ஆண்டு விழிநீரோடு
தொடர்ந்தும்....
வேர் அறுந்த விருட்சமாய்
ஒடிந்து நிற்கின்றோம்!

இரக்கமில்லா எமனுக்குத்தான்
இரையாகினாய்- இன்னமும்
எம் இதயங்களில் நினைவுகளாலே
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்!

எத்தனையோ பேர் வந்து
ஆறுதல்கள் தந்தாலும்
சுரேஸ் குட்டியே உன்குறும்பு- எம்மனதில்
பத்திரமாய் இருக்கிறதே!

மெழுகாய் உருகி எமக்காய்
ஒளி கொடுத்தாய்- இப்போது
இருளுக்குள் இருத்திவிட்டு
நீ எங்கே மறைந்து போனாய்!

நீ பிரிந்த நிமிடத்தில் இருந்து
நாமும் எமைப் பிரிந்து போய்
கண்ணீர் பாத்திக்குள்- தத்தளிக்கின்றோம்!

எல்லை காணாக் கனவுகள்- எம்
இதயத்தில் புதைந்ததால்
வார்த்தையால் வரைய முடியாத- உன்
உஷ்ணம் எமை ஜீரணிக்க வைத்தது

சிந்தனையில் சிறகு தொடுத்து
இலட்சியக் கனவுகள் சுமந்து
புன்னகையில் முத்தம் கலந்து
உத்தமராய் உருவெடுத்த- எம் பொக்கிஷமே!

சுரேஸ் குட்டி உன்னோடு சேர்ந்துதான்- எங்களால்
பயணிக்க முடியவில்லை
உன் நினைவுகளோடேனும்- வாழ்ந்து போகின்றோம்
எம் மூச்சுக்காற்று முடியும் வரை.

**"மரணமும் ஒரு ஜனனம்- ஏனெனில்**
**அதுவும் இன்னுமோர் ஜென்மம்"**

இல.46, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (72192)

உன் நினைவுகளோடு இருக்கும்:
**குடும்பத்தினர்.**

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குற்றவாளிக் கூண்டில் புஷ்!

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' - என்பார்கள். அமெரிக்க ஜனாதிபதி புஷ் தலைமையிலான உலகப் பொலிஸ்கார வல்லரசின் எதேச்சாதிகாரம் தன்னுடைய திமிர்ப் போக்கினால் ஈராக்கில் பண்ணிய அராஜகம் இப்படித்தான் போயிருக்கின்றது.

'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை' மாதிரி ஈராக்கில் தலையிட்ட புஷ், ஈராக் விவகாரத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அந்தரிக்கின்றார். ஆப்பு இழுத்த குரங்காகிவிட்டது அமெரிக்கா.

ஈராக் மீது அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்து இந்த வாரத்துடன் ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. இன்னும் ஐம்பது ஆண்டுகளானாலும், ஈராக்கிலிருந்து அவமானமின்றி அமெரிக்கப் படைகள் திரும்புவதற்கான வாய்ப்பே இல்லை என்றாகி விட்டது.

உலகின் மீதான தனது வல்லாதிக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ஆப்கானிஸ்தானைத் தொடர்ந்து ஈராக் மீது ஆக்கிரமிப்புப் படையெடுப்பை ஆரம்பித்த அமெரிக்காவுக்கு இன்று 'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி' என்ற நிலைமை.

தினசரி ஒரு தற்கொலைத் தாக்குதலும் பலநூறு பேர் பலியும் என்ற கதையாகப் பூகம்பப் பூமியாகி, பெரும் வன்முறைப் புயல் ஓயாது வீசும் ரணகளமாகியிருக்கின்றது ஈராக்.

இந்த ஈராக்கைத்தான் தனது இரும்புப் பிடிக்குள் அடக்கி வைத்து சர்வாதிகார ஆட்சி நடத்துகின்றார் சதாம் ஹுசைன் என்று அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புக்கு முன்னர் குற்றம் சுமத்தி வந்தது.

ஆனால் இன்று இவ்வளவு மோசமாக வன்முறைகளால் அதிரும் ஈராக்கை - இத்தனை லட்சம் அமெரிக்க மற்றும் நேசநாட்டுப் படைகள் ஆக்கிரமித்து நிற்க, அமெரிக்காவின் பொம்மை அரசு தனது உள்ளூர் படைகள் மூலம் நிர்வாகத்தைக் கொண்டு நடத்திக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறுகின்றமையை நோக்கும்போது-

ஐந்து வருட ஆக்கிரமிப்புக்கு முன்னர் ஏதோ சிறுசிறு அசம்பாவிதங்கள், ஆட்சி முறைத் தவறுகளோடு அமைதிப் பூங்காவாக ஈராக்கை நிலைநிறுத்தியிருந்த சதாம், ஆயிரம் தடவைகள் மேலானவர் - திறமையானவர் - என்றே கூறலாம்.

ஈராக் மீதான புஷ் நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பு மனிதப் பேரழிவுக்கு வழிசெய்த கொடூரப் போர்க் குற்றமாகியிருக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு புஷ் நிர்வாகம் சர்வதேசத்துக்குக் கூறிய காரணங்கள் இரண்டுமே சுத்தப் பொய் என்பது இன்று நிரூபணமாகி அம்பலமாகிவிட்டது.

✱ மனிதப் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய நாசகார ஆயுதங்களை சதாமின் நிர்வாகம் தயாரிக்கின்றது.

✱ சர்வதேச பயங்கரவாத அமைப்பான அல் - குவைதாவுடன் சதாமுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு உள்ளது.

- இவைதான் புஷ் நிர்வாகம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு அப்போது கூறிய காரணங்கள். ஆனால் இவை எல்லாம் அப்பட்டமான முழுப்பொய் என்பது ஐயம்திரிபற இப்போது வெளிச்சமாகிவிட்டது.

மனிதப் பேரழிவுக்கு வழி செய்யும் கொடூர ஆயுதங்களை சதாம் நிர்வாகம் தயாரித்தது என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. அதுபோல அந்த நிர்வாகத்துக்கும் அல் - குவைதா தீவிரவாதிகளுக்கும் தொடர்புகள் ஏதும் இருந்தமைக்கான தடயம் கூடக் கிடைக்கவில்லை.

ஆக, தன்னுடைய ஆக்கிரமிப்பு வெறித்தனத்தை செயற்படுத்துவதற்காக உலகைத் திசை திருப்பும் நோக்கில் புஷ் நிர்வாகம் பொய்களை அவிழ்த்துவிட்டு, சர்வதேசங்களையுமே தவறாக வழிநடத்தியிருக்கின்றது. தன்னுடைய இந்த எதேச்சாதிகாரத்துக்கு ஐ.நா. ஆலோசனையைக் கூடப் பெற அது மறுத்துத் தான்தோன்றித்தனமாக நடந்தது.

அதன் விளைவாகப் பல்லாயிரம் பேர் கொடூரமாகக் கொன்றொழிக்கப்படும் இரத்தக் களரி ஈராக்கில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. பல லட்சம் பேர் இடம்பெயர நேரிட்டுள்ளது. பல நகரங்கள் சீரழிந்து சுடுகாடுகளாகியுள்ளன. மீள முடியாத பெரு நாசத்தை ஈராக் எதிர்கொண்டுள்ளது.

குறுகிய வார்த்தைகளில் சொல்வதானால் புஷ் நிர்வாகத்தின் அராஜகத் திமிர்ப் போக்கால் மனிதப் பேரழிவு நாசம் விளைந்திருக்கின்றது. அதுவும் சர்வதேசத்தைப் பொய் கூறித் தவறாக வழி நடத்திக்கொண்டு இந்தக் கொடூரத்தை புஷ் நிர்வாகம் முன்னெடுத்திருக்கின்றது.

இவ்வாறான - மனித குலத்துக்கு எதிரான - கொடூர யுத்தக் குற்றம் இழைத்தோரைத் தண்டிப்பதற்காகவே புதிய உலக ஒழுங்கின்கீழ் ஹேக்கில் சர்வதேச நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

ஹிட்லரும், ஸ்டாலினும் அதுபோன்ற ஏனைய சர்வாதிகாரிகளும் மனிதப் பேரழிவுக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படவில்லை. ஏன் கொடூர சர்வாதிகாரியான உகண்டாவின் இடி அமீன் கூடத் தனது கொடூரங்களுக்கான பிராயச்சித்தமாகத் தண்டனைகளை அனுபவிக்காமல் தப்பித் தமது எஞ்சிய வாழ்க்கையை முடித்துக்கொண்டு போய்விட்டார். அது பழைய உலக ஒழுங்கில் நடைபெற்ற விவகாரம்.

புதிய உலக ஒழுங்கில், சேர்பியாவின் மிலோசுவிச் தமது நாட்டில் ஏகத் தலைவராகப் போற்றப்பட்ட சமயத்தில் கூடத் தப்பமுடியவில்லை. சர்வதேச நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கித் தடுப்புக் காவலில் இருந்தபடியே அவரது கடைசிக்காலம் முடிவுற்றது.

அப்படியாயின், ஈராக் விடயத்தில் உலகைத் தவறாக வழிநடத்தி - செய்யாத குற்றங்களை சதாம் நிர்வாகம் செய்தது என அபாண்டமாகப் பொய் கூறி - அங்கு இன்று மீள முடியாத மனிதப் பேரழிவுக்கு வழிசெய்து நிற்கும் புஷ்ஷும் அவரது நிர்வாக உயர் பீடமும் செய்த தவறுகளுக்குத் தண்டனை அனுபவிக்காமல் தப்பிச் செல்ல அனுமதிப்பது எங்ஙனம் நியாயம்?

எல்லோருக்கும் சம நீதி என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளுமானால் மனிதப் பேரழிவுச் செயற்பாடுகளுக்காக புஷ்ஷும் அவரது நிர்வாகமும் ஹேக் சர்வதேச நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டேயாக வேண்டும். நடக்குமா அது ......?

# பேச்சு மூலந்தான் தீர்வு எனக் கூறிக்கொண்டு இலங்கைக்கு இராணுவ உதவிகள் செய்வதா

## மத்திய அரசிடம் கி.வீரமணி காட்டமான கேள்வி

சென்னை, மார்ச் 21

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம்தான் தீர்வு என்று கூறும் மத்திய அரசு, இலங்கைக்கு இராணுவ உதவி செய்யலாமா? என்று கி. வீரமணி காட்டமான கேள்வி எழுப்பியுள்ளார்.



திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

'நோர்வே நாட்டின் சமாதான முயற்சியால் 6 ஆண்டுகள் இலங்கையில் நடைமுறையில் இருந்த போர்நிறுத்த ஒப்பந்தம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி, தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷவின் சிங்கள இனவெறிப் போக்கால் ஒரு தரப்பாக முறித்துக்கொள்ளப்பட்டது.

'ராஜபக்ஷவின் இனவாதப் போக்கினை இன்று உலகம் முழுவதும் தெரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டு விட்டது. பேச்சுக்கு இலங்கை ஜனாதிபதி போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று இங்கிலாந்து நாடாளுமன்றத்திலேயே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

'போரின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்று மற்றைய நாடுகளைப் போல் இந்திய அரசும் கூறியுள்ளது. இது சரியான நிலைப்பாடுதான். அதே நேரத்தில், இலங்கை அரசின் போர் நடவடிக்கைகளுக்கு உதவுவது போல் இந்திய அரசு நடந்துகொள்ளலாமா? என்கின்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

'தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இங்கு நிலவும் உணர்வு, தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பை ஆதரிக்கும் உணர்வு என்று நினைப்பதை விட, ஈழத்தில் வாழ்வுரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் மீதான மனிதாபிமான இன உணர்வு என்று ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது. தமிழ் நாட்டு மக்களின் உணர்வை சட்டம் போட்டோ, ஊடகங்கள் மூலமாகவோ நசுக்கி விடலாம் என்று நினைப்பது வீண் வேலை-''

- இவ்வாறு அறிக்கையில் கி.வீரமணி கூறியுள்ளார்.

# பிரான்ஸ் உள்ளூராட்சித் தேர்தலில் 12 தமிழர்கள் வெற்றி

பிரான்ஸில் நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 12 தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் பரிஸ் மற்றும் அதன் சுற்றுப்புற உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டள்ளனர்.

இதில் 7 பேர் ஈழத் தமிழர்களாவர் மூவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்களாவர்.

இதே வேளை ஈழத் தமிழர்கள் பிரான்ஸின் தேர்தலின் மூலம் தெரிவாகியுள்ளமை அங்குள்ள ஈழத் தமிழர்கள் மத்தியில் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் சுமார் 125 ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் இதில் 50 ஆயிரம் பேர் ஈழத் தமிழர்களாவர் பிரான்ஸின் உள்ளூராட்சி தேர்தலில் 14 ஈழத் தமிழர்கள் போட்டியிட்டனர். தேர்தலில் வெற்றி பெற்ற ஈழத் தமிழர்கள் அனைவரும் இடதுசாரி கட்சிகளை பிதரிநிதித்துவப் படுத்தி போட்டியிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கவிதை எழுதுதல் பயிற்சிப் பட்டறை

சுன்னாகம், மார்ச்21

வலி.தெற்கு உடுவில் பிரதேச கலாசாரப் பேரவை வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் நடத்தும் கவிதை எழுதுவதற்கான பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்டபட்ட 40 மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சிப் பட்டறை ஆறுமாத காலத்திற்கு சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறவுள்ளது. (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பூரணை விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பஜனை, விஷேட ஆன்மீக உரை, அஷ்டோத்திர நாமார்ச்சனை ஆகியன இடம்பெறும். (1)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (1)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் மகளிர் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் வே.ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தயாபரி சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

அராலி தெற்கு, கிழக்கு, வடக்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரிதேவி குகனேசன் பங்குபற்றுவார்வார். (202)

# மொறட்டுவ பல்கலையின் கற்கை நெறிகளுக்கு அனுமதிப் பரீட்சை நாளை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,மார்ச்.21

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான பொது உளச் சார்புப் பரீட்சை நாளை சனிக்கிழமையும் மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை முற்பகல் 10 மணிக்கு பி.எஸ்.சி.தகவல் தொழில் நுட்பக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கும்-

பிற்பகல் ஒரு மணிக்கும் பி. டெஸ் கற்கை நெறிக்கு விண்ணப்பித் தவர்களுக்கும் பரீட்சை நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் காலை 9 மணிக்கு பி.ஆர்க் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் பிற்பகல் 1.30 மணிக்கு பி.டிசைன் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் பரீட்சை நடைபெறவுள்ளது என யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (202)

# குடும்பநல உத்தியோகத்தர்களின் தடைதாண்டல் செய்முறைப் பரீட்சைத் திகதி மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்.21

குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பகுதி II 'ஆ' பிரிவினருக்கான செயன்முறைப் பரீட்சையின் திகதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை, மானிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் அளவெட்டிப் பிரதேச வைத்திய சாலையில் எதிர்வரும் திங்கட்கிழமையும்-

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையிலும் பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் பரீட்சை நடைபெறும்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அப் பரிவிற்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (202)

# இணுவில் நூலகத்தின் புனருத்தாரண ஆண்டு விழாவையொட்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச்21

இணுவில் பொதுநூலகம், சன சமூக நிலையத்தின் புனருத்தாரண ஆறாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை மரம் நடும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை சிரமதான நிகழ்வும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நூலக அங்கத்தவர்கள் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் நடத்தப்படவுள்ளது. நிலையத்தினரால் வலிகாமம் வலய பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற கழகத்தினருக்கும் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆண்டு விழாவில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 09 | 22.03.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: பிரதமை | பி.இ. 01.13வரை |
| நட்சத்திரம் : | அத்தம் |
| சுபநேரம் : | 03.16 - 04.46 |
| ராகுகாலம்: | 09.16-10.46 |

## கல்வியியல் கல்லூரிக்கு மூன்று பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து மேலும் 3 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ரி.தவஜீவிதன் (மிருசுவில்), எஸ். விஜிதா (ஆனைக்கோட்டை), வை. ஜெகந்தன் (ஏழாலை) ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் இம் மாணவர்களைத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)







## திருமண சேவை

**www.Kumbam.Com**

வீட்டில் இருந்தபடியே வாழ்க்கைத்துணையை தேடுவதற்கு முதன் முறையாக தமிழிலே வெளிவரும் இணையத்தளம் www.kumbam.com ஆகும்.

நீங்களே கும்பம் மூலம் வயதின்படி, நாடு ரீதியாக, தொழில் ரீதியாக, மதம் மற்றும் உயரம் அடிப்படையில் தேடலாம் தெரியலாம். நீங்களும் இன்றே இலவசமாகப் பதிவுசெய்யுங்கள். ஜாதகத்தினையும் கும்பத்திலே பதியலாம். இலவசமாக ஜாதகம் கணித்தும் கொடுக்கப்படும். சகல தரவுகளும் இரகசியமாகப் பேணப்படும். எம்மிடம் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு, உள்நாட்டு பதிவுகள் உள்ளன.

முதன் முறையாக தொலைபேசி ஊடாக இலவசப்பதிவு (யாழ். மக்களுக்காக) உடனே அழையுங்கள் - 0117 200 474

இலங்கை: 011 7200474
கனடா: 001 416 2737 780 *(24 மணிநேர சேவை)*
லண்டன்: 0044 208 123 2093
ஆஸ்திரேலியா: 0061 39 016 016 4
மின்னஞ்சல்: admin@kumbam.com
www.kumbam.com ஒரு தமிழ்ப் பாரம்பரிய விவாகத்தளம். இன்றே பார்வையிடுங்கள்.

குறிப்பு: வெளிநாடுகளில் உள்ள உறவினர்களை கொண்டும் பதியலாம்.

(சி/551914)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்: 20 ✱ 01 ✱ 1928



மறைவு: 20 ✱ 02 ✱ 2008

*கடந்த 20.02.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்*

### அமரர் நல்லதம்பி கந்தசாமி

(முன்னாள் உரிமையாளர், சிறிஸ்கந்தா ஸ்ரோர்ஸ், கேக்கறாவை)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

தகவல்: மனைவி,
மகன்மார்: சிறிஸ்கந்தராசா (இலங்கை மின்சார சபை),
சற்குணராஜா.

(72214)

## பன்னிரண்டாம் ஆண்டின் நீங்கா நினைவுடனே.....

மண்ணில்: 06 . 10 . 1911



விண்ணில்: 04 . 03 . 1996

### திருமதி வேலுப்பிள்ளை அபிராமிப்பிள்ளை


திதி: பௌர்ணமி

*அன்னமூட்டி அறிவமுதளித்து - அவனியிலே*
*உன்னத நிலைக்கு எம்மை உயர்த்திட்ட உத்தமியே - எங்கள்*
*அன்னையே-பன்னிரு வருடங்களென்ன - இம்*
*மண்ணினில் நாம் வாழும் வரை - எம்*
*சென்னியில் ஏற்றி வணங்கும் தெய்வம் நீங்களன்றோ!*

"இலங்கா வாசா",
கண்டி வீதி, சாவகச்சேரி.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(72081)




யாழ்ப்பாணம், மார்ச்21

தென்புலோலி, புற்றளைப் பிள்ளையார் கோயிலின் மணிக்கோபுர கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (202-160)

✱ ✱ ✱

யாழ்.கன்னாதிட்டி, காளிகோயிலில் இன்று காலை பங்குனி உத்தரத் திருவிழா நடைபெறவுள்ளது. (202)

✱ ✱ ✱

புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அபிசேகத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. தினமும் மு.ப. 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் முதலாம்திகதி மு.ப. 10 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிசேகம் நடைபெறும். (202)

## தேசியக் கல்வியியல் கல்லூரியில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்21

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (1)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பூரணைத் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியிலுள்ள சிவதொண்டன் நிலைய திருமுறை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை தஸ்மன், 30, தண்ணீர்தாங்கி வீதி, குருநகர் என்னும் விலாசமுடைய தேசிய அடையாள அட்டை (810894369V), விசேட அடையாள அட்டை மற்றும் தொழில் அடையாள அட்டை ஆகியன அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். *(72211)*

## தவறிவிட்டது

திருமதி தங்கராசா மங்கையற்கரசி என்பவருடைய தே.அ.அட்டை (575181414V) பலாலி வீதிக்கும் பொற்பதி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**T.தங்கராசா,** *பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
*(72020)* **T.P.: 060 2218050**

நிறைமனையம்

## கமலக்கண்ணன் திருமணசேவை

73ஆம் ஆண்டு செவ்வாயோடு 35 கிரகபாவமும், 75ஆம் ஆண்டு செவ்வாயோடு 38 ½ பாவமும் 76ஆம் ஆண்டு செவ்வாயோடு 20¾ பாவமுடைய கனடா பிரஜையும் 73 ஆம் ஆண்டு பாவம் 20¼ லும், 75ஆம் ஆண்டு செவ்வாயோடு 32 பாவமும் லண் டன் பிரஜா உரிமைபெற்ற மணமகன்களுக்கு படித்த, அழகான மணமகள்கள் வேண்டும். மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்களும், லிகிதர்களும், வர்த்தகர்களும் லண்டன், கனடா, பிரான்ஸ் பிரஜைகளான மணமகன்களும் செவ்வாயில்லாத பாவம் கூடிய, குறைந்த மணமக்களும் எம்மிடமுள்ளன.

தொடர்பு:
171/7, மனோன்மணி அம்மன் வடக்கு வீதி, நல்லூர்.
*(72216)* T.P: 0776070862

## இறைச்சிக்கோழி விற்பனை

விசேட வைபவங்கள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுடனும் தேவைப்படின் கொண்டு வந்து தரப்படும்.

அனைத்து நாள்களும் **உதயன் பாரிலும்**
சனி, ஞாயிறு தினங்களில் **ஓமக்ஸ் ஹோட்டலிலும்** உடன் சுத்தம்செய்த கோழி இறைச்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**UTHAYAN FARM**
*இல.5, செம்மணி றோட்*
(சித்த வைத்தியசாலைக்கருகில்),
*நாயன்மார்கட்டு.*
(72218)

**OMAX HOTEL**
*372, ஆஸ்பத்திரி றோட்,*
(பழைய சுபாஸ் ஹோட்டலுக்கருகில்),
*யாழ்ப்பாணம்.*
**T.P.No.: 021 222 9926**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 20 ★ 01 ★ 1937



இறப்பு: 13 ★ 04 ★ 2006

### அமரர் வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்)*

திதி: 21.03.2008

**ஆண்டுகள் இரண்டு சென்றதுவோ**
**ஆன்மாவும் இறைவனடி சேர்ந்ததுவோ**
**ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்**
**அழியாத உம் நினைவுகளுடன் என்றும் நாம்.**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத்தில் இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

*பழைய வீதி,*
கோப்பாய் தெற்கு. (72223)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### *அப்புத்துரை தங்கராசா*

யாழ்ப்பாணம், புகையிரத நிலைய வீதி, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, உடுவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது இந்தியாவில் வசித்தவருமாகிய அப்புத்துரை தங்கராசா 14.03.2008 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் யாழ்ப்பாணம் பிரபல மெக்கானிக் காலஞ்சென்ற அப்புத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் மகனும் கனகமலரின் அன்புக் கணவரும் உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனர் கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மரு மகனும் அமரர் விக்கினேஸ்வரராஜ், கணேஸ்வரராஜ் (பிரான்ஸ்), சிவானந்தராஜ் (டோகா), கவிதா (கனடா), கிரிஜா (சுவிஸ்), ஜெயானந்தராஜ் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமாரி (பிரான்ஸ்), கோமதி (இந்தியா), கிருபாகரன் (கனடா), நகுலன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற பாஸ்கரதாஸ், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி (மலேசியா), லோகேஸ்வரி, சத்தியபாமா (குடும்பநல உத்தியோகத்தர்-யாழ்.மாநகர சபை), புவனேஸ்வரி (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை ந.ப.12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*காளிகோயிலடி, உடுவில்.*
தொ.பே.இல.: 0091 9940562847 (இந்தியா)

தகவல்:
பெறாமகன்
**பா.மதியழகன்.**

(72215)

# வர்ணபுர மீண்டும் சிறப்பாட்டம் பயிற்சியாட்டம் சமனிலையில்!

கயானா, மார்ச் 21

இலங்கை அணிக்கும், கயானா தலைவர் பதினொருவர் அணிக்கும் இடையில் நடைபெற்று வந்த மூன்று நாள் பயிற்சிப்போட்டி சமனிலையில் முடிவுற்றுள்ளது. இரண்டாம் இன்னிங்ஸிலும் சிறப்பாக ஆடிய மலிந்த வர்ணபுர 50 ஓட்டங்களை விளாசினார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இலங்கை கிரிக்கெட் அணி அங்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணி, கயானா தலைவர் தெரிவு அணியுடன் மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் கடந்த திங்கட்கிழமை முதல் பங்குபற்றிவந்தது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 492 ஓட்டங்களையும், கயானா தலைவர் அணி 248 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

நேற்றுமுன்தினம் போட்டியின் கடைசி மற்றும் 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. 244 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாம் இன்னிங்ஸை இலங்கை அணி ஆடியது. ஆரம்பவீரரான மைக்கல் வன்டோட் வெறும் ஒரு ஓட்டத்துடன் விக்கெட்டைப் பறிகொடுத்தார். மற்றைய ஆரம்ப வீரரான மலிந்த வர்ணபுர அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

மறுமுனையில் களம்புகுந்த குமார் சங்ககார 17 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 36 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த வர்ணபுர 87 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது உபாதை காரணமாக பவிலியன் திரும்பினார். முதல் இன்னிங்ஸில் அவர் 132 ஓட்டங்களைக் குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த வீரர்களில் சமிந்த வாஸ் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இலங்கை அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கடைசி நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் போட்டி சமனிலையில் முடிவு பெற்றது.

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் 14 அணிகள் மட்டுமே பங்குபற்ற அனுமதி

டுபாய், மார்ச்.21

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து கூட்டாக நடத்தவுள்ள 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மொத்தம் 14 அணிகள் மட்டுமே போட்டியிடும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

டுபாயில் நடந்த 2 நாள் ஐ.சி.சி. நிர்வாகக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் 16 அணிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி 37 நாட்கள் மட்டுமே நடைபெறும் என்றும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

விளையாட்டு அரங்குகளில்

# மூத்த வீரர்களின் நீக்கத்தை நியாயப்படுத்துகிறார் டோனி

டில்லி,மார்ச் 21

மூத்த வீரர்களை நீக்கி விட்டு இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தினார் என இந்திய ஒருநாள் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடர் முடிவடைந்ததும் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் மூத்த வீரர்களான செளரவ் கங்குலி மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோர் சேர்க்கப்படவில்லை.

மூத்த வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. எனினும் இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி, முத்தரப்பு ஒருநாள் தொடரை வென்றது.

இந்நிலையில் கிரிக்கெட் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் டோனி, மூத்த வீரர்களை நீக்கி விட்டு இளம் வீரர்களை சேர்க்க தான் வலியுறுத்தினார் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பவை வருமாறு:-

''அணியில் எத்தகைய வீரர்கள் இடம்பெற வேண்டும் என்று நான் தெளிவாக இருந்தேன். அதனையே தேர்வுக்குழுவினரிடம் தெரிவித்தேன். இளம் வீரர்கள் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட்டு அந்த அணி வெற்றியும் பெற்றிருக்கிறது. இந்திய அணி தோல்வி அடைந்திருந்தால் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகி இருந்திருக்கும்.

''இந்த விமர்சனங்களை மனதில் வைத்துக்கொண்டு சிறப்பாக ஆட வேண்டும் என்று வீரர்களிடம் கூறினேன். அவர்கள் சிறப்பாக ஆடி வெற்றியைத் தேடித் தந்தனர். இளம் வீரர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். எனினும், இந்த வெற்றியோடு திருப்திப்பட்டு விடக்கூடாது. தொடர்ந்து சிறப்பாக ஆட வேண்டும்.'' - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட்டை பாகிஸ்தானில் நடத்த முடியாவிட்டால் இலங்கைக்கு மாற்றப்படும்

## சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிப்பு

டுபாய், மார்ச்.21

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் என அழைக்கப்பட்டுவரும் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை ஒருவேளை பாகிஸ்தானில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டால் அங்கிருந்து இலங்கைக்கு மாற்றப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்திருக்கிறது.

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து ஆகிய 8 அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன.

ஆனால், பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்ட பிறகு பாகிஸ்தானில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையால், இந்தப் போட்டிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் வரலாம் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருக்கிறது.

இதையடுத்து ஒருவேளை பாகிஸ்தானில் போட்டியை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டால், போட்டியை இலங்கைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. போட்டிக்கு மாற்று இடமாக இலங்கை தேர்வு செய்யப்பட்டிருப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

ஆனால், தற்போது வரை, போட்டி பாகிஸ்தானில்தான் நடக்கவிருக்கிறது. அதில் மாற்றம் செய்யும் எண்ணம் இல்லை என்றும் ஐ. சி.சி. செய்தித் தொடர்பாளர் மேலும் கூறினார்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய அணிகள் மட்டுமே பாதுகாப்புப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்துகின்றன. அதே காரணத்துக்காக இந்த மாத இறுதியில் பாகிஸ்தானில் மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயணத்தை ஆஸ்திரேலியா தள்ளி வைத்தது குறிப்பிடத்தக்கது.

# ஒஸாமா பின்லேடனுக்கு எதிரான முஸ்லிம்களின் முதல் எழுச்சியை உலகம் கண்டது ஈராக்கில்தான்!

## ஈராக் போரின் ஐந்தாண்டு நிறைவுதினத்தையொட்டிய உரையில் புஷ் பெருமிதம்



ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பைக் கண்டித்து வாஷிங்டனில் நடைபெற்ற எதிர்ப்புப் பேரணியில் புஷ்ஷைக் கேலி செய்யும் விதத்தில் கலந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர்.

வாஷிங்டன், மார்ச் 21

முஸ்லிம்களின் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் ஒஸாமா பின்லேடனுக்கு எதிராக முஸ்லிம் சமூகம் முதன்முறையாகக் கிளர்ந்தெழுந்தது ஈராக்கில்தான் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார். அத்துடன் ஈராக்கில் சதாம் ஹுஸைனைக் கவிழ்ப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவு சரியானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான படையெடுப்பின் ஐந்தாவது வருடாந்த நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் ஆற்றியுள்ள உரையில் புஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அமெரிக்காவின் விவேகமான செயற்பாட்டால்தான் இன்று உலகம் பாதுகாப்பாகவுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான - விரிவான- யுத்தத்தில் சமீபத்திய மீள்படைக்குவிப்பு காத்திரமான வெற்றியை ஈட்டியுள்ளது.'' - என்றும் அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

''ஈராக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக நாம் போரிட்டு வருகின்றோம். இது அமெரிக்கா இலக்குகள் மீது அவர்கள் தாக்குதல்களை மேற்கொள்ளாமல் தடுப்பதற்கு உதவியுள்ளது. இதை மறுப்பதற்கில்லை.'' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''பாக்தாத் வீதிகளில் அப்பாவிகளை மிலேச்சத்தனமாக - குரூரமாக - கொன்று குவித்துவந்த பயங்கரவாதிகள் அமெரிக்க நகரங்களிலுள்ள வீதிகளிலும் அப்பாவிகளைக் கொன்று குவிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அவர்கள் முறியடிக்கப்பட்டுவிட்டார்கள். இதனால் ஈராக்கில் படுகொலைகள் அருகிவிட்டன. அமெரிக்காவும் அசம்பாவிதங்களை சாதுரியமாகத் தவிர்த்துக்கொண்டுள்ளது.'' - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''ஈராக்கில் சுனி அரேபியர்கள் மத்தியில் விழிப்புக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை அல் - குவைதாவின் பயங்கரவாதத்தை துடைத்து வருகின்றன. படுகொலைத் தூண்டுதல்களையும் எத்தனங்களையும் முறியடித்து வருகின்றன. இவ்வாறு அமெரிக்கா, பயங்கரவாதிகளை ஓரங்கட்டியுள்ளது. சுனி அரேபியர்களை தேசிய நீரோட்டத்தில் கலக்க வைத்துள்ளது.'' - என்றும் புஷ் விவரித்துள்ளார்.

''ஈராக்கில் பெருந்தொகையான அரபுக்கள் முதன்முறையாக ஒஸாமா பின்லேடனுக்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளார்கள். இதனை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இது குறிப்பிடத்தக்கதொரு விடயம். இதனைக் குறைத்து எவராலும் எடைபோட்டு விடமுடியாது.'' - என்றும் புஷ் மேலும் தமதுரையில் தெரிவித்துள்ளார்.

## திபெத் கலவரம்; 24 பேர் கைது

பீஜிங், மார்ச்.21

திபெத்தில் கடந்த வாரம் நடந்த கலவரங்கள் தொடர்பில் 24 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் 105 பேர் பொலிஸில் சரண் அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தில் ஈடுபட்டவர்கள் திங்கட்கிழமை இரவுக்குள் சரண் அடைய வேண்டும் என்று சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத் மண்டல அரசு கெடு விதித்திருந்தது. சரணடையாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு எச்சரித்தது. இதையடுத்து இதுவரை 105 பேர் சரணடைந்தனர். அதையடுத்து கலவரங்களுடன் தொடர்புடையவர்களைத் தேடும் பணியைப் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர். இதில் 24 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் தீவிர விசாரணை நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நபிகளின் கேலிச் சித்திரத்தை மீள்பிரசுரித்தமைக்காக பாரிய விளைவுகளை ஐரோப்பியர் எதிர்கொள்வர்

### அல் - குவைதாத் தலைவர் எச்சரிக்கை

நியூயோர்க், மார்ச் 21

நபிகள் நாயகத்தை அவதூறு செய்யும் விதத்திலான கேலிச்சித்திரங்கள் மீள பிரசுரிக்கப்பட்டுள்ளமைக்கு, அல் - குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடன் புதிய ஒளிநாடாவொன்றின் வாயிலாகக் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளதோடு, அதற்கான பாரிய விளைவுகளை ஐரோப்பியர் முகங்கொடுக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

அல் - குவைதா இயக்கத்தின் ஊடகப் பிரிவான அல் - சஹாப் நேற்றுமுன்தினம் இந் நாடாவை வெளியிட்டுள்ளது. இதில் பின்லேடன் துப்பாக்கியொன்றைப் பிடித்து குறி வைத்தவாறு காணப்பட்டுள்ளார். நபிகள் நாயகம் பற்றிய கேலிச் சித்திரங்களை சமீபத்தில் சகல டென்மார்க் செய்திப் பத்திரிகைகளும் மீள் பிரசுரம் செய்திருந்தன. 16ஆவது ஆசீர்வாதப்பர் சம்பந்தப்பட்ட சிலுவைப் போரின் ஓரம்சமாக இவை வெளியிடப்பட்டிருந்தன.

2005ஆம் ஆண்டு, முதன்முதலாக இக் கேலிச் சித்திரங்கள், டென்மார்க் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இதில் நபிகள் நாயகத்தின் தலைப்பாகைக்குள் குண்டொன்று இருப்பதைப்போல சித்திரிக்கப்பட்டிருந்தது. ஒஸாமா பின்லேடன் இக் கேலிச் சித்திரங்கள் மீளப் பிரசுரம் செய்யப்பட்டுள்ளமைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். அத்துடன் இதற்கான பாரதூரமான விளைவுகளுக்கு ஐரோப்பியர் முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

## தலாய் லாமாவைச் சந்திக்கவுள்ளாரென பிரிட்டிஷ் பிரதமர் பிறவுண் அறிவிப்பு

லண்டன், மார்ச் 21

எதிர்வரும் மே மாதத்தில் லண்டன் வரும் திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவைத் தான் சந்திக்கவுள்ளார் என பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் தெரிவித்துள்ளார். இந்த அறிவித்தல் சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தும் என்று நிருபர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

ஜேர்மனியின் ஆட்சித் தலைவி அஞ்சலா மெர்கெல் கடந்த செப்டெம்பர் மாதம் தலாய்லாமாவை சந்தித்ததை தொடர்ந்து சீனாவுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை தணிய வைக்க பல மாதகால இராஜதந்திர நடவடிக்கை தேவைப்பட்டது.

இதற்கிடையே திபெத்தில் சமரசமும், சகிப்புத்தன்மையும் வேண்டும் என்று குரல் எழுப்பியுள்ள பாப்பரசர் பென்டிக்ட் அவர்கள், தலாய் லாமாவை தான் நேரடியாகச் சந்திக்க காலம் இன்னமும் கனியவில்லை என்றும் கூறியுள்ளார்.

## குடாநாட்டில் பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் வருமாறு:-

* உலகளாவிய ரீதியில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட அதிக சுமைகளை யாழ். பெண்கள் எதிர்கொள்கின்றனர். தொடரும் யுத்தத்தினால் எதிர்பாராத பல இடர்களை இவர்கள் சந்திக் கின்றனர். இதனால் தொடரும் யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

* போர்ப் பிரதேசங்களிலிருந்து பெரும்பாலான ஆண்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக வெளியேறுகின்றமை பெண்கள் மீது அதிக சுமையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இதனால் அவர்கள் பல வகையான பன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் சந்திக்கின்றனர். ஆகவே இந்நிலை தவிர்க்கப்பட்டுப் பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

* யாழ். பிரதேசத்தில் ஆள் கடத்தல், காணாமற்போதல், நீதிக்குப் புறம்பான கொலைகள் போன்றவை பயங்கரவாதத் தடுப்பு என்ற ரீதியில் இடம்பெறுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

* இதுவரை காணாமற்போனோர், கொலை செய்யப்பட்டோர், கடத்தப்பட்டோர் குறித்து சட்டரீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றம் புரிந்தோர் இனம் காணப்பட்டு உரிய தண்டனை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

* மக்களின் பாதுகாப்பு என்ற பெயரில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுவதோடு அதுவே நியமமாகமாறி வரும் நிலை காணப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

* பெண்களுக்குரிய மனிதாபிமான கௌரவம், மதிப்பு, சுயமரியாதை பேணப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

* மனித உரிமை மீறல்களில் பெண்கள் உரிமை மீறல் இடம்பெறுவது, குறிப்பாக சோதனைச் சாவடிகளில் பெண்களை சோதனைக்குட்படுத்தல், மன அழுத்தத்திற்கான துன்புறுத்தல்களை எதிர்பார்த்தல் போன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

* மகளிர் சுதந்திரமாக வீதிகளில் மட்டுமன்றி, இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் கட்டுப்பாடின்றி சுதந்திரமாகச் சென்று வருவதற்கான நடைமுறைகள் பேணப்படவேண்டும்.

* பெண்கள் தமது குடும்பத்தின் அன்றாட தேவைகளுக்கான பொருள்களை இலகுவாக - நியாய விலையில் - பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

* தொடரும் இராணுவ ரீதியான போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, கௌரவமான சமாதானத்தை எட்டுவதற்கான முயற்சிகளில் பெண்கள் இணைக்கப்பட்டு சமாதான முயற்சிகளை முனைப் போடு செயற்படுத்த பெரும் எத்தனம் மேற்கொள்ள வேண்டும். - என்று உள்ளது.

நேற்றைய ஒன்று கூடலில் பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

(அ-உ-120)

**ENGLISH**

**Spoken with Grammar**

**By: A.Britto**

**புதிய பிரிவு**

ஆரம்பம் 22.03.2008(சனி)

சனி, ஞாயிறு வகுப்புகள்

நேரம் : காலை 11 மணி

இடம் : Jaffna College, UnderGraduate Department

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**B.A. Part I Paper Classes**

(சனி, ஞாயிறு)

ஆரம்பம் 22.03.2008 (சனி)

நேரம் : பி.ப. 1 மணி

## தபால் அதிபரைத் தாக்கி நகைகள் கொள்ளை மயக்கமுற்ற அவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச21

வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்களால் யாழ்.பிரதம தபாலகத்தைச் சேர்ந்த தபால் அதிபர்களில் ஒருவர் தாக்கப்பட்டார்.

கொக்குவில், மந்தியப்புலத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் (வயது 56) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் அவரது வீட்டுக் கதவைத் தட்டிய சில இனந்தெரியாத நபர்கள், தபாலதிபர் கதவை திறந்ததும் உள்ளே சென்று அவரை தலையில் பொல்லால் (கொட்டனால்) தாக்கியுள்ளனர்.

மண்டையில் படுகாயமுற்ற தபாலதிபர் மயக்கமுற்று வீழ்ந்தார். அவர் அணிந்திருந்த நகைகளை பிடுங்கிக் கொண்டு கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

தபாலதிபர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-2-78)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கும் தாக்கியதாக இரவு வரை தகவல் கிடைக்கவில்லை. கடற்பகுதியிலேயே இடி விழுந்திருக்கலாம் என நம்பப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசத் தொடங்கியதே குடாநாட்டில் அதிக மழை வீழ்ச்சிக்குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளதாக யாழ்.வளிமண்டல திணைக்கள யாழ். அலுவலக அதிகாரி எஸ்.புஸ்பராசா தெரிவித்தார். (அ-1)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது என மன்னார் அரச அதிபர் ஏ.நிக்கலஸ்பிள்ளை கூறினார்.

பூநகரிப் பகுதியில் அறுவடைக்கு ஆயத்தமாகவிருந்த மற்றும் அறுவடை செய்யப்பட்ட மொத்தம் 4ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட வயல்களும் நாசமாகியுள்ளன என்று அப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரச மற்றும் தொண்டு நிறுவனங்கள் நிவாரண நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (அ-2)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டு உயர்மட்ட அதிகாரிகள் வன்னிக்குச் செல்வதை விடுதலைப் புலிகள் தமது பிரசாரத்துக்கே பயன்படுத்தி இருக்கிறார் என்று வெளிநாட்டு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வார ஆரம்பத்தில் இலங்கை வந்து திரும்பிய ஐரோப்பிய ஒன்றியத்தின் அறுவர் கொண்ட தூதுக்குழு விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளுக்கு மீண்டும் திரும்புவது குறித்து அவர்களுடன் பேசுவதற்கு, நோர்வே அனுசரணையாளர்கள், இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டிருப்போர் வன்னி செல்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் - வசதி செய்ய வேண்டும் - என்று வலியுறுத்தி இருந்தது வாசகர்கள் அறிந்ததே.

வெளிவிகார அமைச்சு அதிகாரி இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் கருத்து வெளியிடுகையில் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கும் வகையில் சப்புக்கொட்டியிருக்கிறார்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இப்போதைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் வெளிவகார அமைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது. (அ)

**BIT -2nd Semester- BIT**

- Programming 1
- Systems Analysis Design
- Database Systems
- Mathematics for computing 1

*Fully Practical Oriented*

ஆரம்பம் : Saturday 22.03.2008 காலை 11 a.m

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு

TP: 060221 6083 By R.Kumaran B.sc.

**Complete PC set From 33000/-**

**Latest IBM Laptops From 79000/-**

**Branded Pcs IBM, HP From 69500/-**

HOT IN OUR SPOT **UNIT** மனோகரா சந்தி 347, K.K.S Road, Jaffna ✆ 4590720, 2228844

## பிரிவுபசார விழா

யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற தென்மராட்சி கல்வி வலய முன்னாள் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்திற்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய சமூகமும் மாணவர்களும் இணைந்து பிரிவுபசார விழாவை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (202-207)

## குடாநாட்டில் நெல்விலை அதிகரிப்பு

நவாலி,மார்ச் 22

குடாநாட்டின் பல இடங்களிலும் நெல்லின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 2ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு மூடை நெல் கடந்த சில தினங்களாக ஒரு சில இடங்களில் 3 ஆயிரத்து 500 ரூபாவாகவும் சில இடங்களில் அதை விட அதிகரித்த விலையிலும் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மொட்டைக் கறுப்பன் நெல் 4 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-100)

## ரூபவாஹினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுனில் சில்வா பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக தொலைக்காட்சி நிலையமொன்றை இராணுவ அதிகாரியொருவர் நிர்வகிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள சுதந்திர ஊடக இயக்கத்தின் சுனந்த தேசபிரியா, நாட்டை முழுமையாக இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியே இந் நடவடிக்கை என மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறான சூழ்நிலையிலும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான அரசின் முயற்சி இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் யாழ் பிரதேசத்தில் சீர்குலைப்பு நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு பின்னர் புலிகள் அமைப்பின் உண்மைத் தன்மையை புரிந்து கொண்டு பாதுகாப்புத் தரப்பினர் மீது நம்பிக்கை கொண்டு 44 புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவ்வியக்கத்தை விட்டு வெளியேறி பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்தனர்.

இவ்வாறு சரணடைந்தவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக ஆக்குவதற்காகவும் அவர்களை நாட்டின் சிறந்த பிரஜையாக உருவாக்குவதற்காகவும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியின் வழிகாட்டலில் தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையமொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு அவர்களின் எதிர்க் காலத்திற்கான வழிகாட்டல்களுடன் சமய வழிபாடுகளிலும் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புனர்வாழ்வு பெற்று வருவோர் பற்றியும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பாகவும் யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதோடு, குறைபாடுகள் அனைத்தும் இயன்றளவு பூர்த்தி செய்யப்பட்டு வரப்படுகிறது.

அந்த வகையில் 19 ஆம் திகதி யாழ் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேற்படி புனர்வாழ்வு நிலையத்திற்கு விஜயம் செய்ததுடன் அவர்களின் தேவைகள், குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்ததுடன் ஆடைகளையும் அன்பளிப்புச் செய்தார். அவர்கள் தற்போதைக்கும் இராணுவத்தினர்மீது முழு நம்பிக்கைக் கொண்டு செயற்படுகின்றனர். - என்றுள்ளது. (அ-1)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டது தெரிந்ததே. அச்சமயம் அங்கு கட்சித் தலைவர் பிள்ளையான் பிரசன்னமாகியிருக்கவில்லை. எனினும், அவர் பின்னர் ஜனாதிபதியைத் தனியாகச் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினார் எனக் கூறப்பட்டது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுக் கூட்டமைப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான இணக்கம் அப்போது எட்டப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அந்தக் கூட்டமைப்புக்குள் தேர்தலில் ஆகக்கூடிய உறுப்பினர்களைப் பெறும் தரப்பிற்கு மாகாண முதல்வர் பதவியை வழங்குவது என்ற தமது தீர்மானத்தை அச்சமயமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிள்ளையானுக்குத் தெரியப்படுத்தினார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறின.

இதன் பின்னர் பிள்ளையான் தமது ஹோட்டலில் வைத்து பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்து வருகின்றார் என்றும் கூறப்பட்டது.

அந்த வரிசையில் தமிழ் அமைச்சர் ஒருவரையும் அவரது அணியில் உள்ள பிரதி அமைச்சர் ஒருவரையும் அவர் நேற்று சந்தித்திருக்கின்றார்.

முன்னர் புலி சார்புக் கருத்துக்களை வெளிப்படுத்தி வந்த இந்த அமைச்சரின் அணியினர் திடீரென பிள்ளையான் குழுத் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றமை அரசியல் வட்டாரங்களில் எதிர்பாராத விடயம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் லண்டன் கிளைத் தலைவர் சுப்பையா என்பவரும் மேற்படி அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் பிள்ளையானைச் சந்தித்த சமயம் உடனிருந்தார் எனத் தெரிகின்றது.

**வன்னித் தலைமையை மன்னிக்க கிழக்கு மக்கள் தயாரில்லை**

இந்தச் சந்திப்பின் போது பிள்ளையான் தரப்பால் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தெரியவந்தவை வருமாறு:-

* தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கருணா அம்மானே தொடர்ந்தும் தலைவராக இருக்கிறார். பிள்ளையான் பிரதித் தலைவர் பதவியையே வகிக்கின்றார்.

* தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் கருத்து வேறுபாடு ஏற்பட்ட சமயம், அந்த அபிப்பிராய பேதத்தை விட்டுக் கொடுத்துப் பேசித் தீர்ப்பதற்கு வன்னித் தலைமைக்கு வாய்ப்புகள் இருந்தன. வன்னித் தலைமை அதைத் தவறவிட்டு நிலைமையை கெடுத்துவிட்டது. அந்த தலைமையை மன்னிக்க இனி கிழக்கு மக்கள் தயாரில்லை.

* எனினும், வடக்கு மக்களுக்கோ, வடக்கு - கிழக்கு இணைப்புக்கோ தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு எதிரானது அல்ல.

* கிழக்கில் தமிழர் தாயகமும், நிலங்களும் பறிபோக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு அனுமதிக்காது.

அது குறித்துக் காத்திரமான நடவடிக்கைகளை அது எடுக்கும்.

* இளம் தமிழ் சமூகத்துக்கு எதிராகக் கொடூரமான தவறுகளை இழைத்த காரணத்துக்காக சில அரச படைமுகாம்களை கிழக்கில் இடம்மாற்றும்படி - அல்லது அகற்றும்படி - அரசுத் தலைமையை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு வற்புறுத்தியிருப்பது உண்மையே. மேற்படி விடயங்கள் குறித்து அரசுத் தலைமைக்கு விவரமாக விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

- இவ்விடயங்கள் அச்சந்திப்பின் போது பிள்ளையான் தரப்பால் தெரிவிக்கப்பட்டன என அறிய வந்தது. (உ)

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா நாகேஸ்வரி

நீர்வேலி வடக்கு, கேணியடியைச் சேர்ந்த தியாகராசா நாகேஸ்வரி நேற்று (20.03.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்து தியாகராசாவின் அன்பு மனைவியும் சக்திவேல் (பிரான்ஸ்), மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கேணியடி ஒழுங்கை*
*நீல்வேலி வடக்கு, நீர்வேலி.*

தகவல்:
சிவக்கொழுந்து தியாகராசா
(கணவன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.